Registered as a Newspaper in Sri Lanka

صوت المسلم

# முஸ்லிம் குரல்

මුස්ලිම් කුරල්  MUSLIM KURAL

'சுயநிர்ணயத்துடன் கூடிய முஸ்லிம்களின் கௌரவமிக்க சமத்துவமான வாழ்விற்கு'

தருகை -20 ரூபா | 24 செப்டம்பர் 2004 வெள்ளிக்கிழமை 09 ஷஃபான் 1425 சுவடு - 50

03

முஸ்லிம் காங்கிரஸ் + தேசிய ஐக்கிய முன்னணி இணைவு சாத்தியப்படல் வேண்டும்!



05
முஸ்லிம்களுக்கான இடைக்கால, நிரந்தர தீர்வை நோக்கி...

முஸ்லிம் மக்கள் மீதான வன்முறையும், அதற்கு எதிரான போராட்டமும்
09


# ஜனாதிபதி பிரதமர் முரண்பாடு தீவிரமடைகிறது! ரணிலும் ஜே.வி.பி.யும் காய்களை நகர்த்துகின்றனர்!

(அரசியல் செய்தியாளர்)

**கொழும்பு** அரசியல் வட்டாரத்தில் ஜனாதிபதி பிரதமர் முரண்பாடு தீவிரமாக வெளிப்படுவதற்கான சூழல்கள் தோன்றிவிட்டன. வெளிப்படையாகவே ஜனாதிபதி. மஹிந்த ராஜபக்சவை ஓரம் கட்டுவதற்கான செயற்பாடுகளைத் தொடங்கி விட்டார்! இத்தகைய போக்கை முறியடிப்பதற்கு பிரதமர் மஹிந்த தலைமையிலான பாராளுமன்றக் குழுவினர் தீவிரமான செயற்பாடுகளில் இறங்குவதற்கு தயாராகி வருகின்றனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தொடங்கியுள்ள பனிப்போர்: கூட்டமைப்பு அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையை பாதிக்குமென கூட்டமைப்பு பிரதிநிதிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

2005ம் ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஜனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் முடிவடைகிறது. 2005 நவம்பருக்கு முதல் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டிய நிலையில் உள்ள ஜனாதிபதிக்கு. தமது கூட்டமைப்பின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக பிரதம மந்திரி மஹிந்தவைவிட; தனது சொந்தத்தம்பியான அனுராவை நிறுத்துவதே அவரது தெரிவாகவுள்ளது. இதனை கட்சிக்குள்ளும் நாட்டு மக்கள் மத்தியிலும் சாத்தியப்படுத்துவதற்கு பிரதமரை திட்டமிட்டு ஒதுக்கும் வகையில் ஜனாதிபதி செயற்பட்டு வருகிறார். இத்தகைய நிலை ரணில் விக்ரமசிங்கவின் எதிரணிக்கு இப்போது அதிக சந்தோசத்தை தந்திருக்கக்கூடும்.



**அரசாங்கத்திற்கு பாரியநெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது உட்கட்சி முரண்பாடு!**

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் மூழ்கித் தவிக்கிறது. அரசாங்கம் அறுதிப் பெரும்பான்மையைக் கூடப் பெறாத நிலையிலிருந்தது; ஆறுமுகன் தொண்டமானின் இணைவின் ஊடாக அறுதிப் பெரும்பான்மையை எட்டிய இருவார காலத்திற்குள் மீளவும் கூட்டமைப்பு அரசாங்கத்திற்குள் மிகப் பெரும் நெருக்கடியும் முரண்பாடும் தோன்றியுள்ளது துரதிஷ்டமான ஒரு செயற்பாடாகும்.

மஹிந்த ராஜபக்சவை கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதனை எந்த வகையிலும் ஆதரிக்கத் தயாராக இல்லாத நிலையை ஜே.வி.பி. ஏலவே வெளிப்படுத்தி உள்ளது. கூட்டமைப்பின் பிரதான அரசியல் சக்தியான ஜே.வி.பியின் ஆதரவின்றி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதித்தேர்தலில் தோற்கடிக்க முடியாது என்பது வெள்ளிடைமலை.

இந் நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, தான்தான் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் என ஒற்றைக் காலில் நிற்கிறார். இதற்கு ஜனாதிபதியும் ஜே.வி.பியும் உடன்பாடு தெரிவிக்கப் போவதில்லை. அப்படியானால் மஹிந்த விரைவில் மாற்று அரசியல் செயல்பாட்டில் இறங்கக் கூடும் என்ற எதிர்பார்ப்பு கொழும்பு அரசியல் வட்டார்ரத்தில் தலை தூக்கி வருகிறது.

எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் வேலையை ஐக்கிய தேசியக் கட்சி செய்து வருகிறது- மஹிந்தவுக்கு கூட்டமைப்பின் 25க்கும் 30க்கும் இடைப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை ஆதரவு தெரிவித்து அவர் பின்னால் நிற்பதாக அவரின் நெருங்கிய வட்டாரங்கள் கூறுகின்றன. இத்தகைய முரண்பாட்டிற்கு உடனடித் தீர்வினைக் காணாதுவிடின்; அரசாங்கம் எதிர்காலத்தில் பாரிய நெருக்கடியை எதிர்கொள்வது தவிர்க்கமுடியாததாகிவிடும். ■

## அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தினை அதிகரிப்பதற்கு 9000 கோடி வேண்டும்!

**-உள்நாட்டு அமைச்சு தெரிவிப்பு!**

அரசாங்கத்துறை ஊழியுர்களின் சம்பளத்தினை அவர்கள் கோரும் விதத்தில் அதிகரிக்க வேண்டுமானால். அரசாங்கத்திற்கு வருடமொன்றிற்கு 9000 கோடி ரூபா தேவைப்படுமென உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவிக்கிறது. ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் அரசாங்க ஊழியர்க்ள் சம்பள வேறுபாட்டினை எதிர்நோக்கி வருவதால்: அவர்களின் பதவிகளுக்குரிய சம்பளம் வழங்குவது அவசியமாகி உள்ளது. நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியில் உடனடியாக அதிகரித்த சம்பள உயர்வு சாத்தியமில்லை எனவும் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் ஓரளவு சம்பள உயர்வு அதிகரிக்கப்படுமெனவும், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. ■

## புலிகளின் கிழக்குத் தளபதியாக கேணல் பானு நியமனம்!

**வி**டுதலைப்புலிகளில் இருந்து கருணா விலகியதையடுத்து ஏற்பட்டுள்ள நெருக்கடியை முடிவுக்கு கொண்டுவரும் வகையில். புலிகளின் மோட்டார் படையணியின் சிறப்புத் தளபதி கேணல் பானு கிழக்கு மாகாணத்திற்கு பூரண அதிகாரமளிக்கப்பட்ட இராணுவத் தளபதியாக விடுதலைப் புலிகளின் தலைமையினால் நியமிக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு. அம்மாறை மாவட்ட சிறப்பு இராணுவத் தளபதியாக கடமையாற்றிய ரமேஷ். திருகோணமலை இராணுவத்தளபதியாக நியமிக்கப்பட்ட கேணல் சொர்ணம் ஆகியோர் வன்னிக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர். கேணல் பானுவின் நியமனம் இலங்கைப் படைகள் யுத்தமொன்று ஏற்படும் பட்சத்தில் கிழக்கு மாகாணத்தை கைப்பற்ற வைத்துள்ள திட்டத்திற்கு பதிலடியாகவே அமைந்துள்ளது. ■

## முஸ்லிம் காங்கிரஸ் நான்கு எம்.பிக்கள் அமைச்சர், பிரதியமைச்சராவதற்கு விருப்பம்!







**நீதிமன்ற** வழக்கு. அரசாங்கத்தின் ஸ்திரமில்லாத தன்மைகளின் காரணமாக அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு தயக்கம் காட்டிவந்த முஸ்லிம் காங்கிரசின் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள்; இப்போது அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவருவதாக அவர்களுக்கு நெருங்கிய வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

இதுவரை அரசாங்கத் தரப்புடன் இணைந்து கொள்வதற்காக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில்: தங்களின் பிரதேசங்களுக்கான அபிவிருத்தி. தங்களுக்கான அமைச்சர். பிரதியமைச்சர் பதவிகள் தொடர்பாக உறுதியான முடிவினை எட்டுவதில் காணப்படும் நிலையே: அரசாங்கத்துடன் இவர்கள் இணைவதில் கால தாமதத்தை ஏற்படுத்தி வருவதாக அறியமுடிகிறது.

அமைச்சரவை அந்தஸ்தில்லாத ஒரு அமைச்சர் பதவியும்: இரண்டு பிரதியமைச்சர் பதவியும் வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளபோதும்; இவர்களில் யார் அமைச்சராவது. யார் பிரதியமைச்சராவது. யாரை இதில் விடுவது என்பதில் உள்ள சிக்கலே ஒரு முடிவுக்கு வரமுடியாத நிலையைத் தோற்றுவித்துள்ளது.

இவர்களின் பிரதேச அபிவிருத்திக்காக பெருமளவு பணம் ஒதுக்கீடு செய்யப்படுமென அரசாங்கம் வாக்குறுதியை வழங்கிவிட்டதாம். விரைவில் இவர்களுக்குள் முடிவு எட்டப்பட்டவுடன் வெளிப்படையாக அரசாங்கத்தை ஆதரிக்கும் நிலைப்பாட்டினை இவர்கள் அறிவிப்பர் எனத்தெரியவருகிறது. ■

## விஷேட சிறப்பிதழ்

**முஸ்லிம் குரலின்** 51வது இதழ் வடமாகாண முஸ்லிம்களின் வெளியேற்றம், அவர்களின் இன்றைய துன்பவியல் வாழ்வு, மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களின் மரணம், அன்னாரது ஆளுமைகள் பற்றிய சிறப்பிதழாக வெளிவரவுள்ளது. உங்கள் படைப்புகளை எதிர்வரும் செப்டம்பர் 28ஆம் திகதிக்கு முன் எமக்கு அனுப்பிவைக்கவும்.

**இலங்கை முஸ்லிம்களின் சொந்தக் குரல்! சமூக சமத்துவத்திற்கான குரல்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோர்வே அரசாங்கத்திடமிருந்து புலிகளுக்கு 30 மில்லியன் டொலர்கள்

**புலிகளுக்கு** நோர்வே அரசாங்கம் 30 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்குவதற்கு தயாராகிறது என நோர்வே தெரிவித்துள்ளது. புலிகளை இலங்கை அரசாங்கத்துடன் உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவழைக்கும் நோக்கத்துடனேயே இந்த நிதியுதவி வழங்கப்படுகிறது. வழங்கப்படவுள்ள நிதியுதவியின் மூலம் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி. சுகாதாரம், குடிநீர்ப் பிரச்சினைகளை சீர்படுத்துவதற்கு புலிகள் பயன்படுத்துவார்கள் என நம்புவதாக தெரிவிக்கிறது.



இதற்கு புறம்பாக வடக்கு கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அமெரிக்கா, ஜப்பான், சுவீடன், நெதர்லாந்து ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி கடனுதவிகளை பெறுவதற்கும் நோர்வே தீர்மானித்துள்ளது என்றும் தெரியவருகிறது.

# வரவு செலவு திட்டத்திற்கு ம.வி.மு பிரேரணை

**எதிர்வரும்** வரவு செலவு திட்டத்தில் வாழ்க்கைச் செலவினைக் குறைத்தல், தேசிய உற்பத்திகளை உயர்த்துதல் ஆகியவற்றுக்கான பிரேரணையினை நிதியமைச்சர் சரத் அமுனுகமவிடம் ம.வி.மு. ஒப்படைத்துள்ளது. அண்மையில் ம.வி.மு பிரதிநிதிகள் சிலர் நிதியமைச்சரை சந்தித்து இந்தப் பிரேரணையினை ஒப்படைத்துள்ளனர். கூட்டமைப்பினது கொள்கைகளுக்குட்பட்டு மக்களுக்கு நன்மை அளிக்கும் வகையில் இப்பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளதாக ம.வி.மு முன்னணி தெரிவித்துள்ளது.

## அல்-காயிதா போராளிகள் 150 பேர் கொல்லப்பட்டுள்ளனர்

**பாகிஸ்தானினால்** கடந்த மூன்று மாத காலமாக நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது 150 வெளிநாட்டு அல்-காயிதா முக்கிய போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால், ஒசாமா பின் லாதின் உட்பட அல்-காயிதா தலைவர்கள் இன்னும் மறைந்தே உள்ளனர். போராளிகளுக்கெதிரான போர் தொடர்ந்து நடைபெறுவதாகவும், அது எப்போது நிறைவுபெறும் என்பதனை கூறமுடியாதுள்ளது என்றும் பாகிஸ்தானிய இராணுவ ஜெனரல் சுல்தான் தெரிவித்துள்ளார்.

# திருமலையில் கண்காணிப்புக்குழுவுக்கு பொலிஸ் பாதுகாப்பு

**திருமலையிலுள்ள** போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் உறுப்பினர்களுக்கு பொலிஸாரினால் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. வடக்குக் கிழக்கு சிங்கள அமைப்பின் உறுப்பினர்கள் சிலர் திருமலையிலுள்ள போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்திற்குள் நுழைந்து அங்கு உண்ணாவிரதமொன்றினை மேற்கொண்ட சம்பவத்தின் பின்னரே இவ்வாறு அவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகளையிட்டு கிழக்கு மக்கள் அதிருப்தி அடைந்திருக்கின்றனர்.




**திஹாரி** இஸ்லாமிய அங்கவீனர் நிலையக் கேட்போர் கூடம் மற்றும் ஆண்களுக்கான விடுதிகளைக் கொண்ட மூன்று மாடிக் கட்டிட திறப்பு விழாவின் போது கண்டி. மத்திய தென்னகும்புர வை.எம்.எம்.ஏ. இயக்க ஆயுட்கால பொதுச் செயலாளர், ஜனாப், மொஹமட் நாகூர்பிச்சை அவர்கள் சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி அவர்களை வரவேற்பதையும். அருகில் சவூதி இக்ரா நிறுவன பணிப்பாளர் நாயகம் கௌரவ ஸகி அஸாட் ரஹிமி அவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# 2003ம் ஆண்டு திருகோணமலை மாவட்ட விளையாட்டு சான்றிதழ் இன்னும் வழங்கப்படவில்லை

**திருகோணமலை** மாவட்ட கல்வி வலயத்தினால் 2003ம் ஆண்டு நடைபெற்ற மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் இன்னும் வழங்கப்படாமையையிட்டு வெற்றி பெற்ற மாணவர்கள் கடும் அதிருப்தியைத் தெரிவிக்கின்றார்கள். அதிகமான மாணவர்கள் தி/அல்-தாரிக் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்தவர்கள்.

தற்போது தேசிய கல்விக் கல்லூரிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. உடற்கல்விக்கு விண்ணப்பிக்க வேண்டியவர்களுக்கு இச்சான்றிதழ்கள் மிகவும் அவசியமாகும். அவர்களின் எதிர்கால வாழ்க்கை இச்சான்றிதழ்களிலே தங்கியுள்ளதுடன், விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 30ம் திகதி ஆகும். எனவே இதனை உடனடியாக வழங்குவதற்கு மாவட்ட கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுக்குமாறு மாணவர்களால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எம்.எப். முபாரக், கந்தளாய்.




# கல்லேள்ள வீதி கல்வீதியாகுமா?

**பொலன்னறுவை** மாவட்டத்திலுள்ள பிரதான முஸ்லிம் கிராமங்களில் கல்லேள்ள எனும் கிராமமும் பழமை வாய்ந்த ஒரு கிராமமாகும். சுமார் 100 ஆண்டுகளுக்கும் மேலாக முஸ்லீம்கள் இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர். இக்கிராமத்தில் பல வீதிகள் இருந்த போதிலும் அனைத்து வீதிகளும் இன்றுவரை கிறவல் வீதிகளாகவே இருந்து வருகின்றன.

பொலன்னறுவை-மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் இருந்து இக்கிராமத்திற்குச் செல்லும் பிரதான பாதைகூட மேடும் பள்ளமுமாய் பல ஆண்டுகளாய் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. இவ்வீதியூடாக நாளாந்தம் நூற்றுக்கணக்கான வாகனங்களும், ஆயிரக்கணக்கான மக்களும் பயணித்துவருகின்றனர். மழை காலங்களில் வீதிக்குக் குறுக்கே பல கால்வாய்களும், கணவாய்களும் இயற்கையாக உருவாகி பாதசாரிகளுக்கும், வாகனம் செலுத்துவோருக்கும் பெரும் இடைஞ்சலை ஏற்படுத்துகின்றன.

இந்த அவலங்களைச் சுட்டிக்காட்டி இப்பாதையை கற்பாதையாக அமைத்துத்தருமாறு இவ்வூரின் முக்கியஸ்த்தர்களும், பொது அமைப்புக்களும் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வந்ததையடுத்து சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக இப்பாதையை கற்பாதையாக புனரமைக்கும் நோக்குடன் வீதியோரங்களில் கருங்கற்கள் குவிக்கப்பட்டன.

ஓராண்டுக்கு மேல் காலங்கடந்தும் இன்றுவரை இப்பாதை பள்ளம் படுகுழியாகவும், பாதையோரம் கற்குவியல்களாகவுமே காட்சியளித்துக்கொண்டிருக்கின்றன. இதுகுறித்து இக்கிராம மக்களும், இக்கிராமத்திற்கு வருகைதரும் பிற ஊர் மக்களும் அதிருப்தி தெரிவித்து வருகின்றனர். எதிர்வரும் பருவமழைக்காலத்திலும் மக்கள் இப்பாதையைப் பயன்படுத்தும் போது சிரமங்களுக்கும், கஷ்டத்துக்கும் உள்ளாவர். எனவே குவிக்கப்பட்ட நிலையிலுள்ள கற்களைப்பரத்தி பாதைப் புனரமைப்புப்பணியை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், இப்பகுதி அரசியல்வாதிகளும் துரிதமாக நிறைவு செய்து தர வேண்டுமென "பொதுமக்கள்" வேண்டுகின்றனர்.


(செய்தியாளர் பூவி)

# உலக அனக்கொண்டாவின் பயணம்

முஸ்லிம்கள்
இல்லாவிட்டால்
பலஸ்தீனத்தில்
குண்டுமழை
பெய்திருக்காது.

ஈராக்கில் எண்ணெய்
வளமின்றி தரைக்குள் -
உவர்
நீரோடியிருந்தால்
சதாம் ஹூசைன்
விலங்கிடப்பட்டிருக்க
மாட்டார்.

முஸ்லிம்கள் மீது
வீண்பழி
சுமத்தப்படாதிருந்தால்
உலக வர்த்தக மையம்
உருகி உருக்குலைந்து
போயிருக்காது.



பிரித்தானியாவின் பூமிக்குள்
தங்க மாளிகை
இருப்பதாக சந்தேகம் வந்தால்
ஒட்டிப் பிறந்த
அமெரிக்க, பிரித்தானிய
இரட்டைக் குழந்தைகளின்
- நட்பு
அறுவைச் சிகிச்சையாகும்.

அ.கா.மு. றிஸ்வின், மூதூர்.


## முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்!

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகைகளை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாகச் சேருங்கள்! சகோதர, சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

பணத்தை காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசோலை அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publication and Printers எனக் குறிப்பிடவும். காசுக் கட்டளையாக இருப்பின் Muslim Kural Publication and Printers Slave Island Post office என அவசியமாகக் குறிப்பிடவும்.

சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| 3 மாதங்கள் | - (12 இதழ்கள்) | 250/- |
| 6 மாதங்கள் | - (24 இதழ்கள்) | 500/- |
| 1 வருடம் | - (48 இதழ்கள்) | 1000/- |

**தொடர்புகளுக்கு:**
119/15, Viviyan Gunawardena,
Mawatha (Kettampahuwa Road)
Wellampitiya.
Phone :071-4105877

(பிரதிகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




-பையூஸ் அஹமட்

# முஸ்லிம் காங்கிரஸ் + தேசிய ஐக்கிய முன்னணி இணைவு சாத்தியப்படல் வேண்டும்!

## இரு தலைமைகளும் விட்டுக் கொடுப்புக்கு தயாரா?

**கடந்த** வாரம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்; தேசிய ஐக்கிய முன்னணியுடன் இணைந்து அரசியலில் பணியாற்றுவதற்கான தனது விருப்பத்தை பகிரங்கமாகவே ஊடகங்களினூடாக வெளிப்படுத்தி இருந்தார். அவரின் வெளிப்படுத்துகைக்கு சாதகமாக நுஆத் தலைவி பேரியல் அஷ்ரஃப். முகாவுடன் இணைந்து பணியாற்றுவதில் தமக்கு உடன்பாடு உண்டென பச்சைக் கொடியைக் காட்டியுள்ளார்.

மர்ஹூம் அஷ்ரபின் மரணச் செய்தியுடன் பிளவு பட்ட இவ்விரு தலைமைகளும் கடந்த 4 வருடகாலமாக முஸ்லிம் அரசியலிலும் தேசிய அரசியலிலும் ஏட்டிக்குப் போட்டியாகவே இயங்கி வந்தன. கட்சியின் தலைமைப் பதவி யாருக்கு என்ற



கேள்வியுடன் ஆரம்பித்த இவர்களின் பிளவு - பின்னர் கூட்டுத்தலைமையாக ஏற்கப்பட்டு. மு.கா தலைவரின் தனித்த அதிகாரத் தலைமைப்பதவியின் நாட்டத்தின் காரணமாக இருவேறு அணிகளாக மீளவும் பிளவுண்டதை நாமனைவரும் அறிவோம்!

இப்போது ஏற்பட்டுள்ள அரசியல் உள. வெளி நெருக்கடிகளின் காரணமாகவும். தேசிய அரசியலில் ஏற்பட்டு வருகின்ற "ஸ்திரமான அரசாங்க" எதிர்பார்ப்பின் காரணமாகவும் இவ்விரு தலைமைகளும் ஒரு கூட்டு முன்னணியில் பணியாற்றுவது தவிர்க்க முடியாத நிலையை தேசிய அரசியல் அரங்கில் ஏற்படுத்தி உள்ளது. இத்தகைய நெருக்குவாரத்தை இரு தலைமைகளும் மிக அண்மைக்காலமாக அதிகம் உணர ஆரம்பித்துள்ளன. இதில் குறிப்பாக மு.கா. தலைவர் இந்த இணைவின் அவசியம் குறித்தும் இந்த இணைவு முக்கியத்துவமான விடயமாக இப்போது அவரால் வெளிப்படுத்தப்படுவதற்குப் பிரதான காரணம் அவர் முஸ்லிம் காங்கிரஃஸ் பாராளுமன்ற உறுப்பினர்களால் கட்சிக்குள் எதிர் கொள்ளும் பாரிய நெருக்கடியேயாகும்.

இன்றைய பாராளுமன்றத்தில் தேர்தலில் மு.காவின் பாராளுமன்ற உறுப்பினர்களாக பத்துப் பேர் உள்ளனர் - இவர்களில் ஐந்து பேர் தேர்தல் தொகுதி மூலம் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களாகவும்- ஏனைய ஐந்து பேரும் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

**மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள்**

திகாமடுல்ல

1. ரஊப் ஹக்கீம்
2. பைசல் காசிம்

மட்டக்களப்பு

3. அமீரலி

திருமலை

4. நஜீப் ஏ மஜீத்

வன்னி

5. ரிசாட் பதியுதீன்

**தேசியப்பட்டியல் உறுப்பினர்கள்**

6. ஹஸன் அலி (மு.கா)
7. பாயிஸ் (ஐ.தே.க)
8. ஹுசைன்பைலா (ஐ.தே.க)
9. பஷீர் சேகுதாவூத் (ஐ.தே.க)
10. நிஜாமுதீன் (ஐ.தே.க)

இத்தகைய 10 உறுப்பினர்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மட்டக்களப்பு. திருமலை. வன்னி ஆகிய மூன்று மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் மு.கா. தலைமையுடன் முரண்பட்டு நிற்கின்றனர்- திகாமடுல்ல மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பைசல் காஸீம் அங்குமிங்குமாக உள்ளார். இவ்விருதரப்புகளுடனும் உறவினை அவர் பேணி வருகிறார். ஆகவே மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் என்ற வகையில் ஹக்கீம் மட்டுமே இப்போது தனியே மு.காவுக்குள் உள்ளார்.

அதேவேளை தேசியப் பட்டியல் எம்.பிக்களில் முகா சார்பாக தெரிவு செய்யப்பட்ட ஹசன்அலியும் ஐக்கிய தேசியக் கட்சி தேசியப்பட்டியலினூடாக நியமனம் பெற்ற பாயிஸ். பஷீர். நிஜாமுதீன் ஆகியோரும் மு.கா. தலைவருடன் உள்ளனர். மிஞ்சிய ஹுசைன்பைலா. மு.கா. தலைமையுடன் இல்லை.

> எந்த அரசியல் அதிகாரத்திற்காக அன்று பேரியலை கட்சியிலிருந்து வெளியேற்ற ஹக்கீம் முயற்சித்தாரோ, இன்று அதே அரசியல் அதிகாரத்தை மீளவும் உறுதிப்படுத்துவதற்காக பேரியலுடன் இணைந்து பணியாற்றுவதற்கு ஹக்கீம் முன் வந்திருக்கிறார். இதுதான் மு.கா தலைமையின் அரசியல் வியூகமாகவும் உள்ளது!



இந்த இடத்தில் நாம் மிகுந்த கூர்மையாக பார்க்கவேண்டிய விடயம் யாதெனில்: மக்களால் தேர்வு செய்யப்பட்ட மூன்றுபேர் மு.கா. தலைமையுடன் முரண்பட்டு நிற்பதும் நாலமவர் உறுதியற்று தளர்ந்த நிலையில் இருப்பதுவும்: தனக்கு விசுவாசமானவர் என அடையாளம் கண்டு தேசியப் பட்டியலில் நியமனம் பெற்ற ஹுசைன் பைலா எதிரணியுடன்: கூட்டுச் சேர்ந்து நிற்பதுவுமோயாகும். மிகத்தெளிவாக மு.காவின் பாராளுமன்றப்பலம் இப்போது மு.கா தலைவருடன் 4 பேருமாகவும்: எதிரணியில் 5 பேருமாகவும் உருமாறி நிற்கிறது. மிக மோசமான பாராளுமன்ற அரசியல் பலவீனத்திற்குள் இன்று மு.கா. தலைமை தள்ளப்பட்டுள்ளது. இத்தகைய போக்கு மு.கா தலைமை. கட்சிக்குள் எதிர்கொள்ளும் நெருக்கடியாகவும், அரசாங்கத்தை ஸ்திரமாக்குவதில் மு.கா அதிருப்தி பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாடு இன்றைய மு.கா தலைமைக்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாக மாறி வருவதும் மு.கா தலைமையின் இத்தகைய அவசர அழைப்புக்கு தூண்டிய பிரதான அரசியல் காரணியாக உள்ளது.

எந்த அரசியல் அதிகாரத்திற்காக அன்று பேரியலை கட்சியிலிருந்து வெளியேற்ற ஹக்கீம் முயற்சித்தாரோ. இன்று அதே அரசியல் அதிகாரத்தை மீளவும் உறுதிப்படுத்துவதற்காக பேரியலுடன் இணைந்து பணியாற்றுவதற்கு ஹக்கீம் முன் வந்திருக்கிறார். இதுதான் மு.கா தலைமையின் அரசியல் வியூகமாகவும் உள்ளது.

குறிப்பாக சந்திரிகா அம்மையாரின் அரசாங்கத்துடன் ஒரு வகையில் பேரியலினூடாக ஒரு சமரசத்திற்கு வருவதன் ஊடாக; தனது கட்சிக்குள் இருக்கும் எதிரிகளை ஹக்கீம் பலவீனப்படுத்திவிடலாம் என நம்புகிறார். அத்துடன் இத்தகைய இணைவின் மூலம் அதாஉல்லா, அன்வர் இஸ்மாயில் ஆகியோரை ஓரம்கட்டலாம் எனவும் கணக்குப் போடுகிறார்.

இன்னுமொரு வகையில் பேரியலைப் பொறுத்தவரை, அதாஉல்லா. அன்வர் இஸ்மாயிலுடன் இணைந்து போவதிலும் பார்க்க: மு.கா. தலைமையுடன் ஒத்துப்போகலாம் என்ற நிலைப்பாடு நீண்டகாலமாகவே அவரிடம் இருந்து வருகிறது. மு.காவில் கூட்டுத் தலைமைக்கு எப்போதுமே பேரியல் தயாராகவே இருந்து வருகிறார். ஹக்கீம் இப்போது கூட்டுத்தலைமைக்கு இணைந்து போகவேண்டிய நிலைமைக்கு இந்த அழைப்பின் ஊடாக தள்ளப்பட்டுள்ளார்.

ஆகவே இருதலைமைகளினதும் அரசியல் கணக்கின்படி இத்தகைய இணைவு தங்களின் நலனுக்கு சாதகமானது என இவ்விரு தலைமைகளும் தற்போது கருதுகிறது என்பதே பிரதான விடயமாகும்.


இத்தகைய இணைவை மக்களாகிய நாம்: பிரிந்து நிற்கும் முஸ்லிம் அரசியல் தலைமைகளிடையே ஒற்றுமை வேண்டும் என்ற அடிப்படையில் வரவேற்கவேண்டும். இத்தகைய இணைவிற்கு அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும். கடந்த காலத்தில் பல்வேறு தடவைகளில் இப்படியான இணைவு குறித்து பேசப்பட்டும் உள்ளது. அவை நடைமுறைக்கு வரவில்லை. அதுபோல் இந்த அழைப்பும், இருந்து விடக் கூடாது!

# ஜே.வி.பி. அரசாங்கத்தை விட்டும் வெளியேறுவதற்கு வாய்ப்புள்ளது?

**சமாதான** முன்னெடுப்பு தொடர்பில் எழுந்துள்ள முறுகல் நிலையினையிட்டு நாட்டில் பல்வேறு கருத்துகள் உலவுகின்றன.

ஆளும் கட்சி அரசாங்கம் ஆட்சியமைத்து ஐந்து மாதங்கள் எட்டி விட்டன. இந்தக் கால இடைவெளியில் நாட்டின் முக்கிய பிரச்சினையான வடக்கு-கிழக்கு பிரச்சினையின் தீர்வுக்காக அரசாங்கமானது எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பதனை முழு சமூகமும் மிகஆர்வமுடன் உற்று நோக்குகிறது. முக்கியமாக தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான முன்னெடுப்பினை எவ்வாறு மீண்டும் ஆரம்பிப்பது என்பதே உள்நாட்டினதும் வெளிநாட்டினதும் கவனத்தினை ஈர்த்துள்ள பிரதானமான விடயமாகும். சமாதான முன்னெடுப்பினையிட்டு குறிப்பிடும் போது அதனை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். முதலாவது சமாதானப் பேச்சுவார்த்தை. இரண்டாவது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினை பாதுகாப்பது உள்ளிட்ட ஏனைய நடவடிக்கைகள். அதற்கு சமாந்தரமாக வடக்கு கிழக்கின் புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டியது முக்கியமாகும்.

ம.வி.முன்னணி அரசாங்கத்தின் பங்காளிக்கட்சியாக இருப்பினும் இடைக்கால நிர்வாகப் பிரேரணைகளையிட்டு பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுமானால் தாம் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதாக தெளிவாக தெரிவித்துள்ளது. இந்த எச்சரிக்கையினை சதாரணமாக கருத முடியாது. நிச்சயமாக ம.வி.மு. அந்த நடவடிக்கையினை மேற்கொள்ளும் என்றே தோன்றுகிறது. ஜனாதிபதி இடைக்கால நிர்வாகப் பேச்சுக்களில் கலந்து கொள்வதும். ம.வி.மு. அரசாங்கத்தை விட்டும் பிரிவதும் நடைபெறக்கூடியது சாத்தியமே. அதற்கமைய இந்த அரசாங்கமானது



சமாதான முன்னெடுப்பின் காரணமாக வீழ்ச்சியுற இடமுண்டு என அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்கு மோசடியினை தடுத்து நிறுத்துவதற்கு அடையாள அட்டையினால் இயலுமா!

**தேர்தல்களின்** போது தேசிய அடையாள அட்டையினை கட்டாயப்படுத்தும் சட்டத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்கு அனைத்துக்கட்சித் தலைவர்களும் கடந்த வாரம் தீர்மானித்துள்ளார்கள். தேர்தல் ஆணையாளரான தயானந்த திசாநாயக குறிப்பிடும் விதத்தில், 1959 திலிருந்தே தேசிய அடையாள அட்டையினை தேர்தல்களில் கட்டாயப்படுத்தவேண்டும் என்ற பிரேரணையானது சமூகங்களுக் கிடையில் விவாதங்களுக்கு உட்பட்டுள்ளது. ஆனால், அடிக்கடி பல்வேறு காரணங்கள் மீது இந்தப்பிரேரணையானது தட்டிக்கழிக்கப் பட்டது.



அடையாள அட்டையினை கட்டாயப்படுத்தும் உண்மையான தேவை இந்நாட்டின் அரசியல் வாதிகளுக்கு இல்லாமையே காரணமாகும். கடந்த காலங்களில் இரண்டு அரசாங்கங்களின் கீழும் நடைபெற்ற, தேர்தல்களின் போது கள்ளவாக்குகளினதும். வன்முறை வாக்குகளினதும் சதவீதமானது வேகமாக உயர்ந்தது.

ஐ.தே.க. ஆட்சியின் போது நடைபெற்ற மஹர இடைத்தேர்தல், பொ.ஐ.மு. ஆட்சியின்போது நடைபெற்ற வடமேல் மாகாண சபைத் தேர்தல் ஆகியன கள்ள வாக்கு மற்றும் வன்முறை வாக்குகள் காரணமாகவே கரும்புள்ளிகளாக மாறின. எமது நாட்டில் கள்ள வாக்குகளையும், வன்முறை வாக்குகளையும் இடுவதற்காக சம்பந்தப்பட்டோர் பலாத்காரத்தினை பிரயோகிக்கின்றனர். சிலவேளைகளில் வாக்குகளுக்குரிய உத்தியோகபூர்வ வாக்கட்டைகள் முதல் நாளே பலவந்தமாக பறிக்கப்படுவதுடன், சில வாக்கட்டைகள் பணம் கொடுத்து வாங்கப்பட்டு கள்ள வாக்குகள் இடப்படுகின்றன.

ஆகவே. உத்தியோகபூர்வ வாக்கட்டைகளினால் மட்டும் நியாயமானதும் சுதந்திர மானதுமான தேர்தலொன்றினை உறுதிப்படுத்துவது கடினம் என்பதனை கடந்த காலங்களில் இந் நாட்டினது தேர்தல்களினை கண்காணித்த உள்நாட்டு வெளிநாட்டு அமைப்புகள் அரசாங்கத்திடம் அறிவித்துள்ளன. அதற்கிடையில், தேர்தல்களின் போது தேசிய அடையாள அட்டையானது கட்டாயப்படுத்தப்பட வேண்டும். என்று பொதுவான கருத்து அனைவரிடமும் நிலவுகிறது. இத்தருணத்தில் ஆளும் கட்சி அரசாங்கமானது நாட்டின் ஏனைய கட்சிகளினதும் ஆதரவுடன் தேர்தல்களின் போது அடையாள அட்டையினை கட்டாயப்படுத்துவதற்கு முற்படுவதானது இந்நாட்டின் ஜனநாயக அரசியல் பாதையில் இடப்படும் ஓர் மைல் கல்லாகும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இது பாராட்டத்தக்க ஓர் விடயமாகும்.

# பொருட்களின் விலைகள் உயர்வடைகின்ற அளவுக்கு ஊழியர்களுக்கு சம்பளம் போதாது

**நாட்டின்** பொருட்களின் விலைகள் உயர்வடைகின்ற அளவுக்கு மக்களுக்கு தற்போது கிடைக்கின்ற சம்பளமானது போதுமானதாக இல்லை என்று தான் விவாதத்திற்கு இடமின்றி ஏற்றுக்கொள்வதாக திறைசேரியின் செயலாளர் கலாநிதி பீ.வி. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற விதத்திலான சம்பள முறையொன்று அமைக்கப்பட வேண்டியதோடு. அது வேறுபாடுகள் ஏற்படாத வண்ணம் நடைபெற வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். அரசாங்கம் நினைத்தால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து அரச ஊழியர்களுக்கு இடைக்கால கொடுப்பன வொன்றினை வழங்கமுடியுமென தெரிவித்த அவர், அது தொடர்பான முடிவினை அமைச்சரவையே எடுக்கவேண்டியுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கின்றார்.

# மாவனல்லை ஆஸ்பத்திரியின் குறைகள் தீர்க்கப்படுகின்றன

**மாவனல்லை** அரசவைத்தியசாலை பூரண வைத்தியசாலையாக வெகுவிரைவில் மாற்றம் காணவுள்ளதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். மேற்கண்டவாறு சப்ரகமுவ மாகாணசபை உறுப்பினர் அல்-ஹாஜ் தாஹிர் ஜே.பி. குறிப்பிட்டார். அண்மையில் மாவனல்லை தளவைத்தியசாலையின் அபிவிருத்திக்கு 450 இலட்சம் ரூபா செலவில் மூன்று மாடிக்கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாவனல்லை பிரதேச மக்கள் நீண்டகாலமாக கண்டுவந்த கனவொன்று இன்று நனவாகுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இன்று அடிக்கல் வைக்கப்பட்ட இந்த மூன்று மாடிக்கட்டடத்தின் பணிகள் வருட இறுதியாகும்போது பூரணப்படுத்தப்பட்டு. அரணாயக்க. மாவனல்லையைச் சுற்றிவரவுள்ள பிரதேச வாசிகளின் வைத்திய சேவைகளை குறைவின்றி பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கிட்டும்போது பல நன்மைகளையும் பெற்றுக் கொள்ள வழிபிறக்கும் என்றார் அவர்.

இவ்வைபவத்தில் மாகாணசபை முதலமைச்சர் மஹீபால ஹேரத், மாகாணசபை சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க, மாவனல்லை சிரேஷ்ட வைத்திய அதிகாரி ஆர். எட்வாட், ஜிப்ரி நவாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சௌத்துல் உம்மா

# புதிய காத்தான்குடி ஜும்ஆப்பள்ளிவாயல்கள் கட்டிடப் பணிகள் துரிதம்

**புதிய** காத்தான்குடி நூறானிய்யா ஜும்ஆப்பள்ளிவாயல், பத்ரிய்யா ஜும்ஆப்பள் ளிவாயல் ஆகிய இரு ஜும்ஆப்பள்ளி வாயல்களினதும் புதிய கட்டிட நிர்மானப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காத்தான்குடி முஸ்லிம் பள்ளிவாயல்கள் நிறுவனங்களின் சம்மேளனம் இப்பிரதேசத்திலுள்ள ஜும்ஆப்பள்ளிவாயல்களுக்கு வாராந்தம் ஜும்ஆவுக்காக வருகைதரும் பொதுமக்களிடமிருந்து குறைந்தபட்ச நிதியுதவியாக இருபது ரூபாவை தொடர்ச்சியாக திரட்டிவரும் செயல் நடவடிக்கை காரணமாகவே பல லட்சக்கணக்கான ரூபா செலவில் இவ்விரு ஜும்ஆப்பள்ளிவாயல்களினதும் கட்டிட நிர்மானப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# தமிழர் அரசியல் போராட்டம் ஒரு வரலாற்றுத் தொடர்! 04

சி. புஸ்பராஜா எழுதுவது...



பதியுதீன் மஹ்மூத்

> இத்தொடர் தமிழர் அரசியலில் ஒரு முக்கியமான பதிவாகும்; தமிழர் அரசியல் போராட்டத்தின் பல்வேறு அரசியலில் மிதவாத தமிழ் அரசியல் தலைவர்களின் பாத்திரம்; அவர்களின் பங்களிப்பு பலம் பலவீனங்களுக்கூடாகவும்; தீவிரவாத இயக்கங்களின் தோற்றத்தையும் நாம் அறிந்து கொள்ள இத்தொடர் நமக்கு அதிகளவில் துணைபுரியும்!
>
> தமிழர் மிதவாத அரசியல் தலைமைகள் செய்த வரலாற்றுப் பாத்திரத்தையாவது நமது முஸ்லிம் அரசியல் தலைமைகள் செய்யவில்லை என்பதை இத்தொடரை வாசித்தறியும்போது நாம் கண்டு கொள்ளலாம்!
>
> நன்றி-ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்.

'தமிழ் அரசு தபால் சேவை' தொடங்கப்பட்டதும் இலங்கை அரசானது செய்வதறியாது கைபிசைந்து நின்றது. இதன் பலனாக 1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ம் திகதி அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் 48 மணித்தியாலங்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதே தினமே இரவோடு இரவாகக் கட்சியின் தலைவர்கள், முன்னணித் தொண்டர்கள் அனைவருமே கைது செய்யப்பட்டனர். செல்வநாயகம், எம்.சீ.மொஹமது, டொக்டர் நாகநாதன் ஆகியோர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர்.

சாத்வீகமாகப் போராட வந்த பொதுமக்கள் மீது அரச படைகள் கடுமையான வன்முறைகளைப் பிரயோகித்தன. சத்தியாக்கிரகமிருந்தவர்கள் பெண்கள், ஆண்கள் என வித்தியாசமின்றி லொறிகளில் ஏற்றப்பட்டு அங்கும் இங்கும் எனத் திக்குத் தெரியாத இடங்களில் நடு இரவில் இறக்கி விடப்பட்டனர். 20.02.1961- 17.04.1961 வரையிலான காலப்பகுதிகளில் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டமானது. குறிப்பாக, வடகிழக்கில் அரசாங்க நிர்வாகத்தின் அனைத்து அலகுகளையும் சீர்குலைய வைத்தது. இலங்கையின் அரச இயந்திரத்தைக் குப்பை கிளற வைத்தது.

இப்போராட்டத்தில் திட்டமிடல், வருமுன் காத்தல் போன்ற விடயங்களில், தலைவர்கள் விட்ட தவறுகள் உட்பட பல பலவீனங்கள் இருந்தாலும், நான் முன்பு கூறியதுபோல் இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் சத்தியாக்கிரகம் முக்கியமானதொரு மைல்கல் என்பதை மறுக்க முடியாது. மறுக்கக்கூடாது.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்களாக கு.வன்னியசிங்கம், என்.ஆர்.இராஜவரோதயம், கி.மு.இராஜமாணிக்கம், இ.மு.வி.நாகநாதன், அ.அமிர்தலிங்கம் போன்றவர்களும் இருந்திருக்கின்றனர். ஆனாலும் 1949ம் ஆண்டுத் தொடக்கம் 1955ம் ஆண்டு வரையும். பின்பு 1964ம் ஆண்டிலிருந்து 1966ம் ஆண்டு வரையிலும் மட்டும் தலைவராகவிருந்த சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்களையே தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் என எல்லோரும் எக்காலத்திலும் அழைத்தனர்.

சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்களும் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்களுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட(கைச்சாத்திடப்பட்ட) பண்டா-செல்வா ஒப்பந்தம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. பண்டா-செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்திருக்குமாயின். அது நாட்டு மக்களுக்கு நல்லதொரு தீர்வாக அமைந்திருக்கும் என்பதுடன், இவ்வளவு பெரியதொரு யுத்தம் சிலவேளை வந்திருக்காது என்றும் எண்ணுகிறேன். 1957ம் ஆண்டு ஜூலை மாதம் 26ம் திகதி கைச்சாத்திடப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தமும், 1965ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திகதி கைச்சாத்திடப்பட்ட டட்லி-செல்வா ஒப்பந்தமும் அவற்றைக் கைச்சாத்திட்ட சிங்களத்தலைவர்களாலேயே கிழித்தெறியப்பட்டு வழமைபோல் தமிழ்ப் பேசும் மக்களின் தலையில் மிளகாய் அரைக்கப்பட்டது. இலங்கை என்னும் குடையின் கீழ் தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க தமிழ் அரசுக்கட்சி எடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்வி கண்டதன் பலனாகவே ஆயுதப் போராட்டம் தலையெடுத்தது.

## தமிழ் மாணவர் பேரவை

1970ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி. லங்கா சமசமாஜக் கட்சி ஆகியவற்றின் ஐக்கிய முன்னணி அரசின் கல்வியமைச்சரான பதியுதீன் முகமது அவர்களால் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் சட்டத்தின் விளைவாகக் கொந்தளித்த தமிழ் மாணவர்களின் போராட்டத்தின் ஒரு உருவமே தமிழ் மாணவர் பேரவையாகும். தமிழ் மாணவர் பேரவையை ஆரம்பித்தவர்களில் சத்தியசீலன். அரியரத்தினம், வில்வராஜா. சபாலிங்கம், கனகசுந்தரி, பூபதி, சந்திரசேகரம் போன்றவர்கள் முக்கியமானவர்கள். தமிழ் மாணவர்களிடையேயும் தமிழ் இளைஞர்களிடையேயும் ஒரு எழுச்சியையும், எமது பிரச்சனைக்கான தீர்வைப் பலாத்கார மூலமே பெறமுடியும் என்ற உணர்வையும் ஏற்படுத்தியவர்கள் தமிழ் மாணவர் பேரவையினரே.

தொடர்ந்து வரும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் எங்கே நிற்கிறோம்?



மக்களிடமிருந்து வாக்குப் பெற்று பாராளுமன்ற அரசியல் அதிகாரத்தில் இருக்கும் இலங்கை முஸ்லிம் அரசியல் தலைமைகளின் பொறுப்பற்ற அரசியல் செயற்பாடுகள்- நமது மக்களின் நியாயமான வாய்ப்புகள், உரிமைகளுக்கு குழிபறிப்பதாகவே உள்ளது.

இனப்பிரச்சினைத்தீர்வில் முஸ்லிம்களுக்கான நியாயமான தீர்வை எழுத்து மூலம் மிகத் தெளிவாக முன்வைக்க வேண்டிய இன்றைய காலகட்டத்தில், நமது அரசியல் தலைவர்கள் உருப்படியாக எதுவும் செய்யாமல் தங்களுக்குள் கண்ணாமூச்சி ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய பலவீனமான நிலையில், முஸ்லிம் மக்களுக்கான நியாயமான தீர்வைக் கண்டடைய வேண்டிய பொறுப்பும், அதனை மக்கள் மயப்படுத்த வேண்டிய அவசியமும் சிவில் சமூகப் பிரதிகள், நிறுவனங்கள், சமூக சக்திகளின் கடமையாகிவிட்டுள்ளது.

இந்தவகையில் முஸ்லிம் சமூக சக்திகளின் ஒன்றுகூடல், "முஸ்லிம் மக்கள் செயலணியால்" முன்னெடுக்கப்பட்டுவருகிறது. ஆரோக்கியமான திறந்த விவாதமாகவும், காத்திரமான அரசியல் நிலைப்பாடுகளாகவும் இதுவரை இரு அமர்வுகளாக நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் முக்கிய பகுதிகளை நமது வாசகர்களுக்கு தொகுத்துத் தருகிறோம்.

## செயலமர்வின் முன்னுரை

இலங்கையில் நீண்டகாலமாக நிலவி வரும் தேசியப் பிரச்சனைக்கு - இனத்துவ முரண்பாடுகளுக்கு (Ehtnic Conflicts) நியாயமானதும் நீடித்து நிற்கக் கூடியதுமான ஒரு அரசியல் தீர்வினை (Political Solution) எட்டுவதற்கான அரசியல் பேச்சுவார்த்தை (Peace Talk) ஆறு சுற்றுகளாக நடைபெற்று தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. பல்வேறு தடைகளும் திருப்பங்களும் கால தாமதங்களும் ஏற்பட்டாலும் அவற்றையும் தாண்டி இப்பேச்சுவார்த்தை தொடர்ச்சியாக நடைபெறும் என்பது உறுதியாகி வருகின்றது.

அடையப் பெறும் இடைக்காலத் தீர்வும் நிரந்தரத் தீர்வும் இலங்கை முஸ்லிம்களை. குறிப்பாக வடக்கு கிழக்கு முஸ்லிம்களை அரசியல் ரீதியாகவும் சமூக, பொருளாதார ரீதியாகவும் கடுமையாகப் பாதிக்கும் என்பதால் இவ்விடயங்களில் நாம் தீவிர அக்கறை செலுத்துகின்றோம். வெறும் அக்கறை கொள்வது மாத்திரம் போதாது தீவிரமாக தலையீடு செய்யவும் வேண்டும். இத்தலையீடானது கருத்துக்கள், நிலைப்பாடுகள் என்ற மட்டத்திலும் செயல்பாட்டு மட்டத்திலும் இருக்க வேண்டும். செயல்பாட்டு வகையிலான தலையீட்டிற்கு முன்னோடியாக அரசியல் கருத்துக்கள், நிலைப்பாடுகள் மட்டத்தில் நமது காத்திரமான வலுவான தலையீடுகள் இருக்க வேண்டும். அப்படியான ஒரு தயார் நிலையில் நமது சமூகம் இன்னமும் இல்லை.

இப்பேச்சுவார்த்தைகளிலும் இதற்கு வழிவகுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். மேலும் யுத்த காலத்திலும் நாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். நமது பிரச்சினைகளையும் நமக்கான தீர்வுகளையும் பேச்சுவார்த்தை அரங்கில் நாமேதான் பேச வேண்டும். நமக்காக வேறு எவரும் பேச முடியாது. எனவேதான் அனைத்து முஸ்லிம்களினதும் ஒருமித்த கோரிக்கையாக தனித்தரப்புக் கோரிக்கை அமைகின்றது. ஆனாலும், தனித்தரப்பு கோரிக்கை ஒன்றே நமது பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாது.

அரசியல் பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாகப் பங்கு கொண்டு பேசுவதற்கும், அரசியல் பேச்சுவார்த்தைக்கு வெளியே பல்வேறு அரங்குகளிலும் மக்கள் மத்தியிலும் கொண்டு செல்வதற்கும், நமது அரசியல் நிலைப்பாடுகள் புலமைத்துவ மட்டத்தில் தெளிவாக வகுக்கப்பட்டு, பொது இணக்கம் காணப்படல் வேண்டும். மக்கள் ஆணையைப் பெறும் வடிவம் தேர்தலாக, கையெழுத்துக்களைத் திரட்டுவதாக, 'மாபெரும் மாநாட்டினைக் கூட்டுவதாக அல்லது இந்நிலைப்பாடுகளை முன்னிறுத்தி நமது மக்களை பல்லாயிரக்கணக்கில் திரட்டுவதாக அமையலாம். இவை ஒவ்வொன்றும் படிமுறையாகச் செய்யப்பட வேண்டியவை. உண்மையில் இவற்றை முஸ்லிம்களின் அரசியல் கட்சி, அல்லது கட்சிகள் செய்து முடித்திருக்க வேண்டும். துரதிஷ்டவசமாக அவ்வாறு இன்று வரை நடைபெறவில்லை. இதனால் சிவில் சமூகத்தின் மத்தியிலுள்ள அரசியல் விழிப்புணர்வு கொண்டவர்களாகிய நமது தோள்களில் இப்பொறுப்புச் சுமத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி செயல்முறைகளுக்கு அடிப்படையான விடயமாக அமைகின்ற புலமைத்துவ ஆய்வினைச் செய்து, பொதுவான அரசியல் நிலைப்பாடுகளை உருவாக்கும் செயலமர்வின்ன நடாத்த முன்வந்துள்ளோம்.

## சகோ. அப்துல் முன்மொழிவுகள்...

அண்மைக்காலமாக நமது மக்களின் செயற்பாடுகள் எதிர்வினையாற்றுதல் வடிவத்திலேயே இடம் பெற்று வந்திருக்கின்றன. பொதுவாக நமது மக்களின் அரசியல் உறங்குநிலைக்கு மத்தியிலும் அவ்வப்போது அருட்டப்பட்ட உணர்வுகள் காரணமாக நமது செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

2002ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பண்பு ரீதியில் வித்தியாசமான ஒரு காலப்பகுதி உருவாகியுள்ளது. இந்தக் காலப்பகுதியிலும் நாம் அருட்டப்பட்ட வடிவிலேயே நமது செயற்பாடுகளை முன்னெடுத்திருக்கின்றோம். இச் செயற்பாடுகள் நமது அரசியல் சமத்துவம், நமக்குரிய பாத்திரம் என்பவற்றை அழுத்துவதாகவே அமைந்திருக்கின்றன.நமது அரசியல் உள்ளடக்கம் சார்ந்து நாம் குறைவாகவே செயற்பட்டிருக்கின்றோம்.

இனி நாம் இருவகையான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். ஒன்று, நமது அபிலாசைகளுக்கு வடிவம் கொடுத்தல், நிலைப்பாடுகளை வரைதல். இரண்டு இந்த நிலைப்பாடுகளை அடைந்து கொள்வதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்.

தற்போதைய சமாதானச் செயற்பாடுகளின் நேர்மை மற்றும்




## முஸ்லிம்களுக்கான இடைக்கால, நிரந்தர தீர்வை நோக்கி...

நம்பகத்தன்மை பற்றிய சந்தேகங்களும் குறைபாடுகளும் நிலவுகின்றன. இந்தச் சமாதானச் சூழல் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான இராணுவ சமபல நிலையின் விளைவாகவே உருவாகியுள்ளது. இந்நிலையில் சமூகங்களுக்கு இடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புகின்ற ஒரு முயற்சியாகவே எனது ஆலோசனைகள் அமைந்திருக்கின்றன.

**எனது ஆலோசனைகள் பின்வரும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன.**

01. இலங்கை முஸ்லிம்கள் ஒரு தனித்துவமான இனத்துவப் பண்பைக் கொண்டவர்கள் என்பதனை நாம் 100 வருட அனுபவத்தினால் நிரூபித்துள்ளோம்.
02. 1980களின் பின்னர் ஒட்டுமொத்த முஸ்லிம்களின் பிரச்சினையிலிருந்து வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள் தனியான பண்பைப் பெற்றுள்ளது.
03. இலங்கை முஸ்லிம்களில் வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு வடக்கு கிழக்கு தாயகமாகவும் தென்னிலங்கை முஸ்லிம்களுக்கு தென்னிலங்கை தாயகமாகவும் உள்ளது.
04. இதுவரைக்கும் தென்னிலங்கை முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள் முன்வைக்கப்படவில்லை. இந்த ஆலோசனைகளில் அவர்கள் பற்றிய குறிப்புகளும் முன்வைக்கப்படுகின்றன.

ஒஸ்லோ பேச்சுவார்த்தையில் சமஷ்டிமுறைமை பற்றிய இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் இங்கு ஆட்சி முறைமையில் ஒரு பாரிய கட்டமைப்பு மாற்றம் ஏற்படப் போகின்றது.

வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் ஒரு தனியான தேசியமாகக் கருதப்படல் வேண்டும். அவர்கள் சுயநிர்ணய உரிமை கொண்டவர்கள்.

நமது மக்களை புறந்தள்ளிவிட்டு பேச்சுவார்த்தை மற்றும் தீர்வுகளுக்கான நடவடிக்கைகள் முன் செல்லக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இது ஒரு அச்சத்திற்குரிய நிகழ்வு. எனவே இதுபற்றி நாம் அக்கறை கொள்ள வேண்டும். நமது நிலைப்பாடுகளை நாம் முன்வைக்க வேண்டும்.

நம்மைப் புறந்தள்ளிவிட்டு முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகள், யோசனைகள், தீர்வுகள் என்பவை குறித்து நாம் ஒரு நிலைப்பாடு எடுத்தாக வேண்டும்.

நாம் சுயநிர்ணய உரிமை கொண்டவர்கள் என்ற வகையில், நம்மைப் புறந்தள்ளும் அரசியல் தீர்வுகளை நாமும் புறந்தள்ள வேண்டும். நிராகரிக்க வேண்டும்.

நம்மை நிராகரித்தால் நாம் என்ன செய்வது? நம்மை உள்ளெடுத்தால் நாம் என்ன செய்வது? என்பது குறித்த நிலைப்பாடுகளையும் உபாயங்களையும் நாம் கொண்டிருக்க வேண்டும்.

நமது அரசியல் நிலைப்பாடுகளை வகுத்து, முன்கொண்டு செல்வதற்கு அரசியல் சபை (Council) ஒன்றை நாம் உருவாக்க வேண்டும்.

நமது அரசியல் செயற்பாடுகள் சகல தளங்களிலும் முறையாக வெளிப்படுத்தப் படவில்லை. நாம் அரசாங்கத்துடன் பேசுவதற்கு கூடுதல் அக்கறை காட்டுகின்றோம். புலிகளுடன் பேசுவதற்கு அதிக அக்கறை கொள்வதில்லை. இதனை மாற்றி, சம்பந்தப்பட்ட சகல தரப்புகளுடனும் உரிய முறையில் பேசுவதற்கான பொறிமுறைகளைக் கண்டு கொள்ள வேண்டும்.

நாம் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்மொழியும் போது, நமது உரிமைகளை வலியுறுத்துகின்ற அதேவேளை மற்றவர்களின் உரிமைகளையும் அபிலாஷைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கையில் ஒற்றையாட்சி முறை தோல்வி கண்டுள்ளது. எனவே அரசியல் அமைப்பு முறையில் முழுமையான மாற்றங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும். இதற்காக நாமும் குரல் எழுப்ப வேண்டும். இதனை நோக்கி நமது சமூகத்தைத் தயார்படுத்த வேண்டும்.

இப்போது சமஷ்டி முறைமை முன்மொழியப்பட்டுள்ளது.

எனினும் இது தொடர்பாக நேர்மையான முன்னெடுப்புகள் இல்லாததால் சம்பந்தப்பட்ட தரப்புகள் இரகசிய நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் நகர்ந்து சென்று கொண்டிருக்கின்றார்கள்.

இன்றைய நிலையில் தமிழ், சிங்கள சமூகங்கள் பலமாக உள்ளன. அதேநேரம் நாம் கருத்தியல் ரீதியாகவும், பௌதீக ரீதியாகவும் மிகப் பலவீனமாக இருக்கின்றோம். இந்நிலையில் இன்னுமொரு யுத்தம் வெடிக்குமாயின், அது நமது மக்களுக்கு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும். எனவே தீர்வு குறித்தும் அதில் நமது எதிர்காலம் பற்றியும் ஒரு வரையறையை முன்வைக்க வேண்டியது ஏனைய தரப்புகளையும் விட நமக்கு அதிக அவசியமாக உள்ளது. நமது மக்களை சிந்தனா ரீதியாக தயார்படுத்துவதும் அமைப்பாக்கம் செய்வதும் அவசியமாகும்.

இலங்கைக்குள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சமஷ்டி ஆட்சி முறை உருவாக்கப்படல் வேண்டும். வடக்கு கிழக்கிற்கு பொதுவான ஜனநாயகபூர்வமான, தமிழ், முஸ்லிம்களின் சமத்துவத்தை உறுதிப்படுத்தக் கூடிய சமஷ்டிமுறைமையும், அவ்வாறான ஒரு முறைமைக்குள் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு தனித்தனியான சுயாட்சிமுறைகள் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

இன்னும் பல்வேறுபட்டவர்களின் கருத்துகள் அடுத்தடுத்த இதழ்களில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அறிவுரைகள்

**எமது** நாட்டில் மாறிவரும் சமூக நிலைமை காரணமாகச் சிறுவர்களுக்கு வீட்டில் தோழமையுடன் உறவாட எவருமில்லா நிலை காணப்படுகிறது. காரணம் தொழிலுக்காக வெளியே சென்ற பெற்றோர்கள் வீடு திரும்பும் வரை அவர்கள் வீட்டில் முடங்கிக் கிடக்கின்றார்கள். மாலையில் வீடு திரும்பிய பெற்றோருக்கு வீட்டில் பிள்ளைகள் மீது கவனஞ் செலுத்த நேரம் குறைவு காரணம் சமையல், தொலைக்காட்சி என்ற சோலிகள் அவர்களுக்கு.

மேலதிக நேர வகுப்புக்களும் பிள்ளைகளது நேரத்தை எடுக்கின்றன. இந்த நிலையில் பெற்றோர்களின் கடமை மேலும் அதிகமாகிறது. அதற்கு சில ஆலோசனைகள்.



01) சமூக உறவுகளை நல்ல வகையில் கட்டியெழுப்புவதற்கான உதாரண புருஷர்களாய் வீட்டில் பெற்றோர்கள் திகழ வேண்டும். அப்போது பெற்றோரை பிள்ளைகள் பின்பற்றி நடப்பர்.

02) பிள்ளைகள் வீட்டிலும் அண்டைவீட்டுச் சிறார்களுடனும் எவ்விதம் நடந்து கொள்கின்றார்கள் என்பதை நன்கு அவதானித்துத் திருத்தங்கள் அவசியம் எனின் மென்மையாக எடுத்துரையுங்கள் மெச்சுவது அவசியம் எனின் தொடருங்கள்.

03) வயது ஏற ஏறப் பொதுவான குடும்ப உரையாடல்களை அவர்களுடன் நடாத்துங்கள்! எவரையும் தனிப்பட்ட முறையில் தாக்க வேண்டாம்.

04) தம் நண்பர்களை வீட்டுக்கு கூட்டி வரவும், உபசரிக்கவும், அவர்களுக்கு ஆர்வமூட்டுங்கள்.

05) பொறாமையில் இருந்து தூர விலகி நிற்கப் போதியுங்கள்.

06) விளையாட்டுக்களில் ஈடுபட ஆர்வமூட்டுவதற்காக, பெற்றோர்கள் அவர்களுடன் சேர்ந்து விளையாடுதல் நன்று.

07) உரையாடும் கலையினைச் செம்மையாகப் பழக்கி வையுங்கள் என்கிறார் உளவியல் அறிஞர் ஒருவர்.

# நமது அரசியல்வாதிகள்!



ஏச்சுப் பேச்சு
எப்பக்கமும்
கூச்சல்
கூக்குரல்கள்
குழப்பங்கள்
என்றாலும்...
எந்த அரசியல்வாதியும்
அதிர்ந்து அடங்கியதாக
அறிய முடியவில்லை!

காசு
கார், வீடு
கனவுகாணும்
கனசொகுசுகள்
கண்டபின்னர்....
போர்க்குணமும்
பொறுப்புணர்வும்
புலம்பெயரும்!

நல்லவிலை கிடைத்தால்...
நாவையே அடகுவைக்கும்
நமது அரசியல் கலாசாரம்!

சில கேடிகளுக்குள்
சிறகுகளை சிறைப்படுத்தியும்
சில்லறைப் பதவிகளுக்கு
சிந்தனையை சிதறடித்தும்
பேடிகளாயும்
பெரும் கோடிகளாயும்
பெயர் பெற்றுக்கிடக்கிறார்கள்
நமது
பெரிய அரசியல்வாதிகள்

யூ.எல்.எம். நஜீப்

# கணவன் - மனைவி: வாழ்வின் இரு சக்கரங்கள்!

**கணவன்** - மனைவி உறவு. வண்டியின் இரு சக்கரங்களைப் போன்றது. வண்டி ஓடுவதற்கு சக்கரங்கள் எவ்வாறு அவசியமோ அவ்வாறே வாழ்க்கை என்ற வண்டி நகர்வதற்கு கணவன் மனைவியின் உறவு. புரிந்துணர்வு அவசியமாகும்.

குடும்பத்தின் தலைமைத்துவம் ஆண்களுக்குரியது. அவனே அந்தக் குடும்பத்தின் முழுச் செலவுக்கும் பொறுப்பாகும். இதுகுறித்து நபி(ஸல்) அவர்கள் கூறுகையில் "மனைவிக்கு முறையாக உணவு. உடை வழங்குவது கணவன் மீது கடமையாகும்" என்றார்கள்.

மனைவிக்கு. உழைத்து வருமானம் தேடிக்கொடுப்பது குடும்பத் தலைவரான ஆணின்மீது கடமையாகும். இதைவிட்டும் தவறி இன்று முதுகெலும்பற்ற சில ஆண்கள். தனக்கு வருமானம் தேடிவரச்சொல்லி அரபு நாடுகளுக்கு பெண்களை அனுப்பிவிட்டு இங்கு சுகபோக வாழ்க்கை வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அங்கு சென்ற பெண்கள் தனது பிள்ளைகளின் கவலை ஒரு பக்கம்: வேலை கஷ்டம் மறுபக்கம் என உழைத்து வருகிறார்கள்.



இஸ்லாம் எல்லா விடயங்களிலும் ஆண்களுக்கு முக்கிய பங்கைக் கொடுத்திருக்கின்றது. வரலாற்று ரீதியாக நாம் நோக்கினாலும் ஆட்சி அதிகாரங்கள். நபித்துவம் போன்றவற்றில் அல்லாஹுத்தஆலா ஆண்களுக்கே வழங்கி இருந்தான். எனவேதான் குடும்பத்தின் பொறுப்பையும் ஆண்களுக்கு வழங்கி இருக்கிறான்.

கணவனின் தலைமைத்துவத்திற்கு கட்டுப்படுவது. பெண்ணின் கடமையாகும். இது பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறுகையில். "ஒரு பெண் ஐந்து நேரமும் தொழுது. றமழான் மாதத்தில் நோன்பும் பிடித்து. தனது கற்பையும் பாதுகாத்து. தனது கணவனுக்கும் கட்டுப்பட்டு நடந்தால் அவள் விரும்பிய வாயில் மூலம் சுவனம் நுழைவாள்" என்றார்கள். (நூல் அஹ்மது) ஒரு இஸ்லாமியப் பெண் எப்படி வாழ வேண்டும் என்பதை நபி (ஸல்) அவர்கள் தெளிவாக விளங்கப்படுத்திக் காட்டியுள்ளார்கள்.

குடும்பப் பெண்கள் தன் கணவனை தன் வசப்படுத்தி. தன்பால் கவர்வது ஒரு பெண்ணின் சாதுரியமாகும். கணவனுக்காக தன்னை அலங்கரித்துக்கொள்வதும். கணவனின் சுக துக்கங்களில் பங்குகொள்வதும். கணவனின் குறை நிறைகளை பிறரிடம் கூறாது பிணக்குகள் ஏற்பட்டால் தாமே தீர்த்துக் கொண்டு பொறுமையாக வாழ்வதாலும் குடும்பத்தில் சச்சரவுகள் சமாதானமாக முடிந்துவிடும்.

குடும்பத்தில் கணவன் மனைவிக்கு மத்தியில் பிரச்சினைகள் வரக் காரணம். ஒருவரைப்பற்றி ஒருவர் சரியான முறையில் புரிந்துகொள்ளாமைதான். ஒருவரை ஒருவர் புரிந்து விட்டுக்கொடுத்து. இஸ்லாமிய முறையுடன் வாழ்ந்தால் எல்லாப் பெண்களுக்கும் தங்களுடைய குழந்தைகளை நல்லறிவுள்ள. மார்க்கப் பற்றுள்ள உலகு போற்றும் உத்தமர்களாக வளர்த்து எடுக்க முடியும் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது.

**எம்.எம்.எம். அன்ஸார், (மௌலவி)**
**தஹனக்வெவ**

# பலஸ்தீனர்களை தமது தாயகத்தில் சிறைப்படுத்தும் சுவர்

**உலகில்** நீண்ட வரலாற்றினைக் கொண்ட ஆயுதப் போராட்டமாக கருதப்படும் பலஸ்தீனப் பிரச்சினையானது புதியதொரு பரிமானத்தினை அடைந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

1967ல் இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட பலஸ்தீனத்தின் காஸா பள்ளத்தாக்கில் வசிக்கும் யூதர்கள் இப்போது தமது அரசாங்கத்திற்கு எதிராக எதிர்பார்ப்பாட்டம் ஒன்றினை நடத்துகின்றனர். காஸா பள்ளத்தாக்கிலிருந்து அந்த யூதக் குடியேற்றத்தினை அகற்றுவதற்கான இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனது முடிவுக்கு எதிராகவே அவ்வார்ப்பாட்டம் நடைபெறுகிறது. அதேவேளை தினந்தோறும் இஸ்ரேலியப் படையினரால் பலஸ்தீனக் குடியேற்றங்களிலுள்ள போராளிகளும், பாமர மக்களும் கொல்லப்படுகின்றனர்.

இந்த மோதல்களின் புதிய கட்டத்தின் அடுத்த அறிகுறிதான் இஸ்ரேலினால் பலஸ்தீன குடியேற்றத்தினை ஊடறுத்து அமைக்கப்படுகின்ற பாரிய மதில். ஹேயிக் நகரிலுள்ள சர்வதேச நீதிமன்றத்தினால் இந்த மதில் நிர்மாணப் பணிகள் சட்ட விரோதமானது என்று தீர்ப்பு வழங்கியிருப்பினும் கூட அந்தத் தீர்ப்பினை பாரியளவில் எதிர்த்தபடி இஸ்ரேலானது தொடர்ந்தும் மதில் கட்டும் பணிகளில் ஈடுபடுகிறது.

பலஸ்தீன அரேபிய பிரதேசத்திற்கு ஊடாக, அந்தப் பிராந்தியத்தினை ஆக்கிரமித்து இந்த பாதுகாப்புத் தடுப்பினை நிர்மாணிப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே தீர்மானிக்கப்பட்டது. இந்த கட்டுமானப் பணிக்கு வைக்கப்பட்டுள்ள பெயர் கூட விவாதத்திற்குரியதே. இதனை ஓர் சுவர் அல்லது மதில் என்று குறிப்பிட விரும்பாத இஸ்ரேலானது. அதனை பாதுகாப்பு வேலி என்றே குறிப்பிடுகிறது. ஐக்கிய நாடுகளின் தஸ்தாவேஜூகளில் இதன் பெயர் 'தடை' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால். பலஸ்தீனர்களோ இதனை தங்களை அடைத்து வைக்கும் சுவர் என்றே குறிப்பிடுகின்றனர். தென் ஆபிரிக்காவின் கறுப்பு வெள்ளை இனங்களை பிரித்து வைத்தது போன்ற இனவாத சுவர் என்றே சில பலஸ்தீனர்கள் இதனைக் குறிப்பிடுகின்றனர்.



பெயர் எதுவாக இருப்பினும், இதனை நியாயப்படுத்தும் வகையில் இஸ்ரேலியர்கள் கூறுவது என்னவென்றால், அடிக்கடி இஸ்ரேலுக்கு எதிராக பலஸ்தீனர்களால் மேற்கொள்ளப்படுகின்ற தற்கொலை குண்டுத் தாக்குதல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கே இந்தச் சுவர் நிர்மாணிக்கப்படுகிறது என்பதே.

640 கிலோமீட்டர் (440 மைல்) நீளமான இந்தச் சுவரின் கட்டுமானப் பணிகள் 2002 ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சுவரில் சில இடங்களில் வலைகள் பொருத்தப்பட்ட மிக உயரமான பலமான வேலி அமைக்கப்பட்டுள்ளதுடன். வேறு சில இடங்களில் கொங்கிறீட்டை பயன்படுத்தி பலமான சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இந்தச் சுவரின் உயரமானது எட்டு மீட்டர்களாகும். இந்தச் சுவரில் பலஸ்தீனப் புறத்திலுள்ள பகுதிகளில் புதிய ரக மிக நுண்ணிய உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. மிகச் சிறிய அசைவுகளைக் கூட அவற்றினால் அடையாளம் கண்டுகொள்ள முடியும். சுவரில் இடைக்கிடையே மிக உயரமான காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு கிலோமீட்டர் சுவரினை நிர்மாணிப் பதற்கு செலவாகும் தொகை 02 மில்லியன் டொலர்களாகும். இத்தகைய பாரிய செலவினைத் தாங்கியபடி இஸ்ரேலியர்களைப் பாதுகாப்பதற்காக கட்டப்படுகின்ற இந்த சுவரின் காரணமாக பலஸ்தீனர்கள் தமது தாயகப் பிரதேசத்திலேயே சுற்றி வளைக்கப்பட்டு தடுத்துவைக்கப்படவுள்ளனர். இந்த சுவர் நிர்மாணிப்புக்கு எதிராக பலஸ்தீனர்கள் எதிர்ப்பை காட்டி வருகின்றனர்.

இஸ்ரேலினால் அமைக்கப்படுகின்ற சுவர் பற்றிய விசாரணைகளை மேற்கொண்ட சர்வதேச நீதிமன்றமானது. இது சர்வதேச சட்டத்தினை மீறும் செயலாகுமென்று தீர்ப்பு வழங்கியது. இந்தச் சுவர் அமைவது அரேபிய நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் 1967ல் இடம்பெற்ற 06 நாள் யுத்தத்தின்போது இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட ஜோர்தானினது மேற்குக் கரை. காஸாப் பள்ளத்தாக்கு. கிழக்கு ஜெருசலம் ஆகிய பிரதேசங்களுக்கு ஊடாக என்பதே அதற்குக் காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேலும்** ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரை "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ்" என்ற அடிப்படையில் இஸ்லாத்துக்கும், முஸ்லிம்களுக்கும் தியாகம் செய்து ஜிஹாத் செய்ய தனது வாழ்க்கையை முழுமையாக தூய அடிப்படையில் அமைத்துக் கட்டாயக்கடமையாகும். இது பற்றி ஆழமாக சிந்தித்து நமது முஸ்லிம் சமுதாயம் சீர்தூக்கிப் பார்த்து உடனடியாக களத்தில் இறங்க வேண்டிய காலகட்டம் இதுவாகும். இதற்காக முஸ்லிம் மக்கள் அனைவரையும் அணி திரட்ட வேண்டும்: நம்முடைய ஆற்றல்,

# ஒரு பெரும்பான்மை சமூகத்தில் முஸ்லிம்களின் ஜிஹாத் விரிவான பார்வை!

தொடர்... 04



~தந்தாவி-றீன் அப்துல் அஸீஸ்~

கொண்டால் நம்மிடையே நிற வேறுபாடோ, குல வேறுபாடோ, அரபி அஜமி என்ற வேறுபாடோ இல்லாமல் புனித இஸ்லாம் கூறும் பண்புகளான ஐக்கியம், நம்பிக்கை, கட்டுப்பாடு, தியாகம், பொறுமை என்ற அடிப்படையில் நமது வாழ்க்கையை அமைத்து இந்த உலகில் நிம்மதியாக வாழ்ந்து மறு உலகிலும் நிம்மதியாக வாழ்வதற்கு புனித இஸ்லாம் வழிகாட்டுகிறது. இதில் எங்களுக்கு தெளிவு வேண்டும். அத்துடன் புனித இஸ்லாம் மனித சமூகத்தை அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்கின்றது. தூய்மையான மனதுடன் இஹ்லாஸோடு எல்லா விடயங்களிலும் செயற்படுமாறு கூறுகிறது. நமது மனங்களில் கசடு வஞ்சகம், [illegible] இல்லாத [illegible] வாழ்க்கை வாழ்வதுடன்.

-உண்மையில் நீதியான, நேர்மையான இஸ்லாமிய ஆட்சியை - முஸ்லிம் சுயாட்சியை - முஸ்லிம் தேசத்தை நிறுவுவதற்கு உழைப்பதும், அநீதியான, நேர்மையற்ற ஆட்சிக்கும், அட்டூழியங்களுக்கும் எதிராக ஒன்று திரண்டு போராடுவதும் அத்தகைய தூய்மையான முஸ்லிம் சமூகத்தை உருவாக்குவதற்கு உழைப்பதும் ஜிஹாத்தான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.-

ஒரு நீதியான நியாயமான. தர்மத்துடனும் கூடிய ஒரு உறுதியான சமூகத்தை உருவாக்கவும் நாம் பாடுபட வேண்டும். மேலும், மூடச் சடங்கு சம்பிரதாயங்களுக்கும், அநியாயங்களுக்கும், அக்கிரமங்களுக்கும் எதிராக ஒன்றுபட்டுப் போராடி ஒரு தூய்மையான முஸ்லிம் உம்மத்தை உண்டாக்குவதும் "ஜிஹாத்" என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும் இந்த வகையில்தான் ஒரு சமூகத்தில் அதாவது குறிப்பாக வடக்கு கிழக்கில் முஸ்லிம்கள் வாழுகின்ற பிரதேசங்களில் காபிர்களால் முஸ்லிம்களுக்கெதிராக ஏதாவது திட்டமிடப்பட்டு முஸ்லிம்களுடைய உயிர் உடைமைகளை அழிப்பதற்கு முஸ்லிம்களுடைய இருப்பிடங்களை விட்டு வெளியேற்றுவதற்கு ஒரு குழு முயற்சித்தால் அந்தக் குழுவுடன் நாம் சமாதானம் பேச வேண்டும் அவர்கள் சமாதானம் என்ற போர்வையில் பொய்யையும், புரட்டையும் சொல்லிக் கொண்டு எம்மைத் தொடர்ந்து அழித்துக் கொண்டிருந்தால் அவர்களை எதிர்த்துப் போராடுவதற்கு நமது சக்திகளை, எமது பலத்தை திரட்டி ஒரு முகப்படுத்த வேண்டியதும், அவர்களுக்கெதிராக போராட வேண்டியதும் "ஜிஹாத்" செய்வதும் அதிகாரங்கள் அனைத்தையும் முழுமையாக உபயோகிக்க வேண்டும். நாம் அச்சமடைந்தவர்களாக எப்போதும் பேசிப்பேசி இருப்பதை விட களத்தில் இறங்கிச் செயற்பட வேண்டிய காலகட்டம்தான் இது. இதுபற்றி திட்டமிடக்கூடிய நாம் ஏன் தொடர்ந்தும் வாதப்பிரதிவாதங்ளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். இன்றே நாம் அனைவரும் தயாராகுவோம். எதிரிகளின் அதாவது புனித இஸ்லாத்தினதும், முஸ்லிம்களினதும் எதிரிகளுடைய கொட்டத்தை அடக்கு வதற்கு இன்றே புறப்படுவோம். வல்ல அல்லாஹ் அவனது அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்.

"நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் அவனுக்காக (அல்லாஹ்வுக்காக ஜிஹாத் செய்ய வேண்டிய முறையில் ஜிஹாத் செய்யுங்கள்" (அல்குர்ஆன் - சூறதுல் ஹஜ் - 22: 78)

உண்மையில் நீதியான, நேர்மையான இஸ்லாமிய ஆட்சியை முஸ்லிம் சுயாட்சியை முஸ்லிம் தேசத்தை நிறுவுவதற்கு உழைப்பதும் அநீதியான, நேர்மையற்ற ஆட்சிக்கும், அட்டூழியங்களுக்கும் எதிராக ஒன்று திரண்டு போராடுவதும் அத்தகைய தூய்மையான முஸ்லிம் சமூகத்தை உருவாக்குவதற்கு பாடுபடுவதும் ஜிஹாத்தான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்.

'அச்சமூட்டி எச்சரிப்போரை நாம் (எந்த) ஓர் ஊருக்கு அனுப்பிய போதும் அங்கிருந்த செல்வந்தர்கள் நிச்சயமாக நாங்கள் நீங்கள் எதைக் கொண்டு அனுப்பப்பட்டிருக்கின்றீர்களோ அதை நிராகரிக்கின்றோம் என்று கூறாமல் இருக்கவில்லை. இன்னும் நாங்கள் செல்வங்களாலும், மக்களாலும் மிகுந்தவர்கள் ஆகவே (இத்தகைய செல்வங்களை பெற்றிருக்கும்) நாங்கள் வேதனை செய்யப்படுபவர்கள் அல்லர்" என்றும் கூறுகிறார்கள்' (அல்குர்ஆன் - சூறத்துஸ் ஸபா - 34:34,35)

*(இன்னும் வரும்....)*


**படிப்பாளிகள் கவனத்திற்கு!**

**1-48 இதழ்கள் (பைண்டிங் தொகுப்பு) தேவைப்படுவோர், ரூபா. 750/-க்கான காசுக்கட்டளை/காசோலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.**


# நவம்பர் 01ம் திகதியிலிருந்து மின்கட்டண உயர்வு

மின்கட்டணத்தினை நவம்பர் 01ம் திகதியிலிருந்து உயர்த்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் மாதமொன்றுக்கு 90 அலகுகளுக்குக் குறைவாக மின்சாரத்தினை பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் இந்த மின்கட்டண அதிகரிப்பினால் பாதிக்கப்படமாட்டார்கள்!

எப்படியிருப்பினும், 91 அலகுகளிலிருந்து மின்சாரத்தினைபயன்படுத்துபவர்கள் அதிகரித்த கட்டணத்தினை செலுத்த வேண்டியிருக்கும். இந்த கட்டண திருத்தத்திற்கு அமைய 91 - 180 அலகுகளுக்கு தற்போது 01 அலகுக்கு அறவிடப்படும் ரூபாய் 10.60 க்குப் பதிலாக ரூபாய் 11.40 அதாவது, 01 அலகுக்கு 80 சதம் கூடுதலாக அறவிடப்படும். 181 அலகுகளிலிருந்து தற்போது 01 அலகுக்கு அறவிடப்படும் ரூபாய் 15.80க்குப் பதிலாக ரூபாய் 16.40 அதாவது, 60 சதம் அறவிடப்படும்.

உலக சந்தையில் எரிபொருளினது விலைகள் தொடர்ந்தும் உயர்வதன் காரணமாக மின்சார சபையானது பாரிய நஷ்டத்தினை அடைந்திருப்பதனாலேயே சாதாரண பொது மக்களை பாதிக்காதவகையில் ஆரம்ப 90 அலகுகளினது கட்டணம் அதிகரிக்கப்படாமல், இதற்கும் மேல் பயன்படுத்தும் அலகுகளினது மின்கட்டணத்தினை அதிகரிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

## இம்மாத முடிவில் 05ம் ஆண்டு பரீட்சை முடிவுகள்

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் முடிவுகளை இம்மாத முடிவில் வெளியிட இயலுமென பரீட்சைத் திணைக்களம் கூறுகிறது. கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பரீட்சையில் 360,187 மாணவ - மாணவிகள் தோற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொல்லப்பட்டோரின் இனபந்துக்கள் புஷ்ஷுக்கு எதிர்ப்பு

இம்முறை அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தயாராகவுள்ள புஷ்ஷுக்கு எதிராக போட்டியிடும் ஜோன் கெரியினது தேர்தல் பிரச்சாரங்களில் அதிகளவில் ஆதரவளிப்பதற்குத் தயாராக உள்ளவர்கள் யார் தெரியுமா? 2001 செப்டம்பர் 11ம் திகதி தாக்குதலில் கொல்லப்பட்டவர்களினது கைம்பெண்களும், இனபந்துக்களுமே என தெரிய வருகிறது.

அவர்கள் ஜனாதிபதி புஷ்ஷை வெறுப்பதாகவும், ஜோன் கெரிக்கே தமது வாக்குகளை அளிக்கப்போவதாகவும் கூறியுள்ளனர்.



ஈராக்கிய போருக்கும், செப்டம்பர் 11ம் திகதி சம்பவத்திற்குமிடையில் எவ்விதத் தொடர்புமில்லை என்று அவர்கள் தெரிவிக்கின்றனர். தமது கணவர்மார், உறவினர்கள் கொல்லப்பட் டதற்குக் காரணகர்த்தா புஷ்தான் என்று கைம்பெண்கள் தெரிவித்தனர்.

# இ.தெ.கா ஊவா, மத்திய மாகாணசபையில் 02 அமைச்சுப் பதவிகளைக் கோருகிறது!

தமது கட்சியானது பாராளுமன்றத்தில் ஐ.ம.சு.கூ. அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதற்கு தீர்மானித்துள்ளதால் ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் 02 அமைச்சர் பதவிகள் தமது கட்சிக்க வழங்கப்பட வேண்டுமென தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

# சுகாதார சேவைக்கு புதிதாக பத்தாயிரம் பேர் சேர்ப்பு



அரசாங்க மருத்துவமனை பணிகளுக்காக ஆண் பெண் தாதிமார் 5000 பேரும், மருத்துவப் பணிகளுக்காக மேலும் 5000 அதிகாரிகளும் பயிற்சிகளுக்கு சேர்த்துக்கொள்வதற்கு திறைசேரியின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சரான நிமல் சிறிபால டி சில்வா தெரிவிக்கிறார்.

இதற்குப் புறம்பாக குடும்ப சுகாதார சேவை அதிகாரிகள் பதவிகளுக்கு ஏற்கனவே 1500 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார். ஊழியர்களைக் குறைப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுப்பதாக சுகாதார சேவைகள் தொழிற்சங்கத்தின் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியதற்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# திருகோணமலையில் 13 போலி சாரதி அனுமதிப்பத்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன

திருகோணமலை தலைமையகப் பொலிஸினது மோட்டார் வாகனப் பிரிவினால் நகரத்தின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வாகன சாரதி அனுமதிப்பத்திர பரிசோதனைகளின்போது மோசடியான முறையில் தயாரிக்கப்பட்ட தற்காலிக 13 போலி சாரதி அனுமதிப்பத்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். நாட்டில் சட்டவிரோதமான சாரதி அனுமதிப்பத்திரங்கள் புழக்கத்தில் உள்ளதாக பொலிஸ் திணைக்களம் மேலும் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஒரு நாளைக்கு ஆயிரம் கருக்கலைப்புகள் உயிரை முளையிலேயே கிள்ளி எறியும் கொடூரம்!

இலங்கை அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாடாகும். உண்மையில் ஏதோ ஒரு வகையில் எல்லா விடயங்களிலும் அபிவிருத்திதான்-இப்போது கருக்கலைப்பு விடயத்திலும் ஆச்சரியம் தரும்



அபிவிருத்தி கண்டுவிட்டது இலங்கை.

இத்தகைய போக்கு நன்மையா தீமையா என்றால்; பெருமளவில் தீமையாகவே நமக்கு எதிர்காலத்தில் இந்த விடயம் வந்து முடிவடையப் போகிறது என்பது மட்டும் நிச்சயத்திலும் நிச்சயம்!

மனித உயிர்களை அழிப்பது பாவத்திலும் பாவம்; ஒரு நாளைக்கு கருக்கலைப்பில் மாத்திரம் ஆயிரம் உயிர்கள்; ஏனைய உயிர் அழிவுகள் இன்று எண்ணிப்பாருங்கள்! இத்தகைய கொலைக் கலாசாரத்தை நாம் ஒரு பாதுகாப்பாக எண்ணி அதனை நாடுகிறோம் என்றால் நமது மனநிலைதான் என்ன? இதனால் சமுதாயச் சீர்கேடுகளும் பெண்களுக்கான நோய்களும் அதிகரித்துவிட்டன.

சனத்தொகை வளர்ச்சி ஆபத்து. இதனால் கர்ப்பத்தடையும் கருக்கலைப்பும் நல்ல பாதுகாப்பு என பலர் கூறுகின்றனர். அவர்களைப்பார்த்தால் அவலை நினைத்து உரலை இடித்த கதை போல்தான் இருக்கிறது. சனத்தொகை வளர்ச்சி என்பது மானிட குலத்தின் தவிர்க்க முடியாத ஒரு வளர்ச்சிப்போக்காகும். சனத்தொகைக் குறைப்புத்தான் மானிட வாழ்வில் வீழ்ச்சியான நிலைமை.

சனத்தொகை வளர்ச்சி என்பது அதிகரிக்க அதிகரிக்க நாட்டில் பொருளாதாரப்பிரச்சினைகளும் மற்றும் ஏனைய பிரச்சினைகளும் உண்டாகும் என்றுதான் பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனால், இலங்கையின் வரலாற்றுக் காலம் தொட்டே எந்தவொரு பிரதேச மக்களும் சனத்தொகை வளர்ச்சி வீதத்தால் முழுமையாகப் பாதிக்கப்பட்டு நலிவடைந்ததாக வரலாறு இல்லை இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்க்கப்படமுடியாத யுத்தமும், அரசாங்கங்களின் வங்குரோத்து பொருளாதாரக் கொள்கைகளும்தான் காரணம். இதனை மறைப்பதற்கும் மக்களை திசை திருப்புவதற்குமே இத்தகைய பொய்ப் பிரச்சாரங்களை கட்டவிழ்த்து விடுகின்றனர்.

தற்பொழுது இதன் பின்னணியில்தான் இந்தக் கருக்கலைப்பு (கருவழிப்பு) விடயத்தினையும் நாம் எடுத்து நோக்கவேண்டியுள்ளது. இலங்கையில் கருக்கலைப்பு வீதம் மிகமிக வேகமாக அதிகரித்து வருகின்ற மனித உயிர் கொல்லி நடவடிக்கையாக தற்பொழுது மாறிவிட்டது. குறிப்பாக கொழும்பு நகரில் மாத்திரம் ஒரு கருவை அழிப்பதற்கு அறவிடும் தொகை 2,300 ரூபாவாகும். கடைசியாக மருத்துவ ஆய்வு நிபுணர்களினால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, இலங்கையில் ஒரு நாளைக்கு சுமார் ஆயிரம் கருக்கலைப்பு மனித உயிர் கொல்லும் செயற்பாடுகள் நடைபெறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



குறிப்பாக ஒன்றை மாத்திரம் இங்கு நாம் நினைவுபடுத்த வேண்டும். அதாவது,

இலங்கை அரச சட்டத்தின்படி இவ்வாறு கருக்கலைப்பு செய்வது சட்டவிரோதமானது; அதாவது, தண்டனைக்குரிய குற்றமாகும். இதனை கண்டிப்பாகத் தடைசெய்யவேண்டியது அரசின் கட்டாயக் கடமையாகும்.

தற்போதெல்லாம் மருத்துவர்கள் இந்தக் கருக்கலைப்பு விடயத்தினை ஒரு தரமான வியாபார நடவடிக்கையாகவே மேற்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். குறிப்பாக, நகரப்பகுதியில் இவ்வாறு கருக்கலைப்பு ஒன்றை செய்வதற்கு 2,300 ரூபா அறவிடுகிறார்கள். இத்தொகை பல்வேறு இடங்களைப் பொறுத்து வேறுபடுகிறது. குறிப்பாக இலங்கையின் தூர கிராமப் பகுதிகளில் சுமார் 7,000 ரூபா முதல் 12,000 ரூபா வரை கருக்கலைப்புக்கு அறவிடுகிறார்கள்.

எனவே இவ்வாறான சட்டவிரோதமான கருக்கலைப்பு விடயத்தில் ஈடுபடும் மருத்துவர்களுக்கும், அத்துடன் கருவைக் கலைப்பதற்காக வருகின்ற அந்தப் பெண்ணுக்கும், அவளுடைய கணவன் உட்பட யாராக இருந்தாலும், உடனடியாக சட்டநடவடிக்கை எடுத்து-தண்டனைகளை வழங்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## முஸ்லிம்களின் மீளக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்தும் புலிகள்!



புலிகளினால் வடக்கிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் தமது பிரதேசங்களில் மீளக் குடியேறுவதனை தடுக்குமுகமாக பல்வேறு வகையில் இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் மீது புலிகள் வற்புறுத்தல்களை மேற் கொள்வதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

முல்லைத்தீவுப் பிரதேச முஸ்லிம்கள தமது காணிபூமிகளில் குடியேறுவது தொடர்ந்தும் தடுக்கப்படுவதுடன், முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளை புலிகளின் மாவீரர் குடும்பங்களுக்கிடையில் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், தமக்குச் சொந்தமான வாகனங்கள் தமது பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்வது தடுக்கப்படுவதாகவும், முல்லைத்தீவு பெரியமடு முஸ்லிம் பாடசாலையின் பெயர் புலிகளினால் மாற்றப்பட்டுள்ளதாகவும், முஸ்லிம் மாணவமணிகள் கல்வி பெறுவது தடுக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

## புருனை முடிக்குரிய இளவரசரின் ஆடம்பரத் திருமண வைபவம்



மனித உள்ளத்தினை கொள்ளைகொள்ளும் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இன்னும் உலகம் பூராவிலும் நடைபெற்றுகொண்டே உள்ளன. விஞ்ஞானம், தொழிநுட்பம், வளங்களின் ஆராய்ச்சி ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் கூட தமது சம்பிரதாயங்களுள் நின்று கலாசாரத்தினை பாதுகாப்பதற்கு முனைகின்றனர். அவை உலகத்தவரின் நினைவில் அபூர்வ சம்பவங்களாக நிலைத்தும் நிற்கும்.

அவ்வாறானதொரு அபூர்வமான சம்பவமொன்றினை சில தினங்களுக்கு முன் ஊடகங்கள் மூலமாக உலகத்தவர்கள் கண்டும் கேட்டும் ரசித்தனர். உலகில் செழிப்பான ராஜ்ஜியங்களுள் முதலிடத்தினை வகிக்கும் புருனை ராஜ்ஜியத்தில் நடைபெற்ற ராஜாங்க திருமண வைபவமே அதுவாகும்.

புருனை அரச பரம்பரையின் தற்கால சுல்தானாகிய ஹசானால் பொல்கியாவினது புதல்வனாகிய புருனையின் எதிர்கால முடிக்குரிய இளவரசரான 30 வயதான அல்-முஹ்தாத் ப்ளாஹ் பொல்கியாவினது திருமண வைபவமானது உலகம் பூராவிலும் பரவியுள்ள அரச பரம்பரையினரின் பங்குபற்றலுடன், அவர்களது ஆசியுடன் நடந்தேறியது. 17 வயது நிரம்பிய சாரா சலே எனும் மத்தியதர குடும்பத்தைச் சேர்ந்த உயர் ராஜாங்க அதிகாரியொருவரின் மகளே இளவரசரின் மனைவியாவார். அவர்களினது அரச மாளிகையில் திரண்ட 2000 பேருக்கும் மேற்பட்ட உலக விருந்தினர்களின் எதிரில் இந்த சம்பிரதாயபூர்வமான திருமண வைபவம் நடந்தேறியது.

40 வருடங்களுக்குப்பின் புருனை அரச வம்சத்தில் நடந்த திருமணமாக இது இருந்ததினால் பலகோடி அமெரிக்க டொலர்கள் இத்திருமண வைபவ வரவேற்புக்கு மட்டும் செலவிடப்பட்டதாக மேற்கு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## சபாநாயகரை வெளியேற்றுவதற்கு நாம் ஆதரவு வழங்க மாட்டோம்!

-முத்து சிவலிங்கம்-



சபாநாயகர் வி.ஜ.மு. லொகுபண்டாரவுக்கு எதிராக ஆளும் கட்சியானது நம்பிக்கையில்லாப் பிரேரணையினைக் கொண்டு வந்தால் இ.தொ.கா வானது அதற்கு ஒரு போதும் ஆதரவு வழங்காதென மக்கள் அபிவிருத்தி, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார். ஜனாதிபதிக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டாலும் கூட தமது கட்சியானது அதற்கும் ஆதரவளிக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். தமது கட்சியிலுள்ள 08 பா.உ.க்களினதும் வாக்குகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபாநாயகரை அப்பதவியிலிருந்து விலத்துவதற்காக மீண்டும் ஒருபோதும் தாம் வாக்களிக்கப்போவதில்லை என்கிறார் அவர்.

## மானா மக்கீனின் நூல் அறிமுக விழா!

பன்னூலாசிரியர் மானா மக்கீனின் இருபத்தைந்தாவது நூலாக வெளிவந்துள்ள "வள்ளல் ஹபீபு முஹம்மது அரசர்" நூல் அறிமுக விழா எதிர்வரும் 26ம் திகதி ஞாயிற்று கிழமை கொழும்பு "தாருஸ்ஸலாம்" மண்டபத்தில் நடைபெறவுள்ளது.



கடந்த ஜுலை 31ல் சென்னையில் வெளியான இந்த நூல், தமிழகத்தின் கீழக்கரை ஊரில் 200 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவரும், புத்தளம்-ஏத்தாலையில் இலங்கைத் துறைமுகம் ஏற்படுத்தி கப்பலோட்டிய முஸ்லிமாகவும், 'இரண்டாவது சீதக் காதி வள்ளல்' எனப் புகழ் பெற்றவருமான ஹபீபு முஹத்மத் அவரைப்பற்றிய ஒரு ஆய்வு நூலாகும்.

இந்நூல் அறிமுக விழாவில், பிரதம அதிதியாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கலந்து கொள்கிறார். மற்றும் தமிழக இலக்கிய அறிஞர்கள், கீழக்கரை முஸ்லிம் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## பயோ டேட்டா



| | |
|---|---|
| பெயர்: | அரசியல்வாதி |
| தொழில்: | ஏமாற்றுதல் |
| விரும்புவது: | மக்களின் வாக்குகளை |
| வெறுப்பது: | சேவை செய்வதை |
| தகைமை: | குறிப்பிடும்படியாக ஒன்றுமில்லை |
| நிரந்தர முகவரி: | ஐந்து நட்சத்திர ஹோட்டல் |
| பொழுது போக்கு: | வாக்குறுதிகளை மீறுதல் |
| இலட்சியம்: | பணம் சேர்ப்பதும் தொடர்ந்தும் பதவியில் இருப்பதும் |

இ. நளீம் மூதூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மக்கள் மீதான வன்முறையும், அதற்கு எதிரான போராட்டமும்

**முஸ்லிம்** மக்கள் சொந்த மண்ணில் இருந்து வெளியேற்றப்பட்டு 10 வருடங்கள் கடந்த நிலையிலும், எந்தவிதமான அடிப்படை உரிமைகளும்இன்றி வாழ்விழந்து ஒடுக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் தமிழ்அடிமையாக உயிர்வாழ்கின்றனர். 1990 ஐப்பசி மாதம் 30 ம் திகதி வடக்கில் இருந்து 48 மணி நேரத்தில் அனைத்து பாரம்பரிய தலைமுறை உழைப்பையும் பறித்தெடுத்த பின்பு, சொந்த மண்ணில் இருந்து ஈவிரக்கமின்றி துரத்தப்பட்டனர். முஸ்லீம் மக்களுக்கு இழைத்த துரோகம், தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணயத்துக்கான விடுதலைப் போராட்ட சீரழிவை மீண்டும் ஒரு முறை நிறுவியது. புலிகளின் குறுந் தேசிய இனவாதம் தமிழ் மக்களின் தேசியத்தையே மறைமுகமாக கேலி செய்து ஒடுக்கியதையே நிரூபித்தது.

சொந்த மண்ணில் இருந்து வேரோடு பிடுங்கப்பட்டு, எந்தவிதமான காரணத்தையும் முன்வைக்காது இரவோடு இரவாக ஆயுத முனையில் துரத்திய நிகழ்வு, தமிழ் மக்களின் வரலாற்றிலும், உலக வரலாற்றிலும் ஒரு கறுப்புநாள்தான். இந்த நிகழ்வையிட்டு இலங்கையின் அனைத்து சமூகங்களும், ஆதரவாகவோ எதிராகவோ ஒரு நிலைப்பாட்டை எடுத்தனர். புலிகளின் இந்த மனித விரோத நிலைப்பாட்டை எதிர்க்காது மௌனம் சாதித்த அனைவரும், ஏதோ ஒரு விதத்தில் குற்றவாளிகளே.

தேசிய விடுதலைப் போராட்டம் கூட ஜனநாயகக் கோரிக்கையின் உள்ளடக்கத்தில், ஒரு வர்க்கப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை பாட்டாளி வர்க்கம் புரிந்து கொள்ளத் தவறிய நிலையில், வலது குறுந் தேசியவாதம் தேசியவிடுதலைப் போராட்டத்தின் தலைமைக்கு வந்தது. இந்த வலது தேசியவாதம், குறுந்தேசிய கண்ணோட்டத்தில் மற்றைய இனங்களை எதிரியாக அடையாளம் காட்டியே தன்னையே கட்டமைக்கின்றது. இந்த குறுந்தேசிய இனவாத கண்ணோட்டம் மட்டுமே, அதன் பிரதான மையமான அரசியல் கோசமாக இருந்தது. மற்றைய இன மக்களை எதிரியாக காட்டிய அரசியல், மற்றைய இன மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கவும், அவர்களை எதிரியாக காட்டி ஒடுக்கவும், ஒழிக்கவும் வழிகாட்டியது. தமிழ் தேசிய விடுதலை போராட்டத்தில் ஆயுதம் ஏந்தி போராடிய

> "முஸ்லிம் மக்களின் துயரத்தையும் அந்த வரலாற்றையும் தமது பிழைப்புவாத அரசியலுக்கு பயன்படுத்துபவர்கள், அந்த மக்களுக்கான விடுதலைக்கான தீர்வை முன்வைப்பதில்லை."

அமைப்புகளின் அரசியல் வரையறை இதுவாகவே இருந்தது. பிந்திய காலத்தில் இதன் வளர்ச்சிப் போக்கில் புலிகள் தமது இராணுவ வலிமையில் உயர்ந்த அதிகாரத்தை பயன்படுத்தி ஒடுக்குவதில், ஈவிரக்கமற்ற மனிதவிரோதத்தை கையாண்டனர்.

முஸ்லிம் மக்களின் துயரத்தையும் அந்த வரலாற்றையும் தமது பிழைப்புவாத அரசியலுக்கு பயன்படுத்துபவர்கள், அந்த மக்களுக்கான விடுதலைக்கான தீர்வை முன்வைப்பதில்லை. இந்த நிலையில் பிழைப்புவாதத்தை அம்பலம் செய்யவும், முஸ்லீம் மக்களின் பிரச்சனைகளையும் மற்றும் அதன் தீர்வையும் முன்வைப்பதும் பாட்டாளி வர்க்கத்தின் முரணற்ற கடமையாகும்.

இந்த வகையில் முஸ்லீம் மக்களை வெளியேற்றிய காரணம் என்ன என்பதை ஆராய்வதன் ஊடாக, தேசியத்துக்கு பதிலாக குறுந்தேசிய போராட்டம் தமிழ், முஸ்லீம், சிங்கள, மலையக மக்களுக்கு எதிராக எப்படி மாறியது என்பதை பார்ப்போம்.

கிழக்கில் முஸ்லீம் மக்கள் மேலான தொடர்ச்சியான இனப்படுகொலைத் தாக்குதல்களும், அதைத் தொடர்ந்து வடக்கில் இருந்து 75000 முஸ்லீம் மக்களை ஏன் புலிகள் வெளியேற்றினர்? இதற்கு பலரும் தமது பிழைப்புவாத அரசியலில் தொடங்கி குறுந்தேசிய இனவாத கண்ணோட்டம் வரை, பல்வேறு விளக்கத்தை முன்வைக்கின்றனர். அதை பார்ப்போம்.

1.புலிகள் இந்துத்துவ கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டே, முஸ்லீம் மதத்தை எதிர்த்து இதை நடத்தினர்

2.புலிகள் வெள்ளார் உயர் சாதி கண்ணோட்டத்தை அடிப்படையாக கொண்ட இயக்கம். இதனால் முஸ்லிம்களை இழிவாக கருதி இதைச் செய்தனர்.

3.யாழ் என்ற உயர் தகைமையை கட்டமைக்கும் பிரதேசவாத கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்ட புலிகளின் தலைமை, பிரதேசரீதியாகவே முஸ்லிம் மக்களை இழிவாக்கி வெளியேற்றினர்.



-எழுதுவது - சமரசம்-

4.முஸ்லிம் மக்கள் தமிழ் மக்கள் மேல் நடத்திய தாக்குதல்களுக்கு பதிலடியாக இதை செய்தனர்.

5.முஸ்லிம் மக்கள் போராட்டத்தை காட்டிக் கொடுத்தனர். இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டனர். அனைத் தடுக்கவே தாக்கியதுடன் வெளியேற்றப்பட்டனர்.

6.முஸ்லிம் மக்கள் "தொப்பிபிரட்டிகள்" அதனால் தாக்கியதுடன் வெளியேற்றப்பட்டனர்.

7.முஸ்லிம் மக்கள் வந்தேறு குடிகள். அவர்கள் தமிழ் தேசிய இனம் அல்ல. அதனால் தாக்குவதும் வெளியேற்றுவதும் அவசியமாகும்.

8.விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பி.பி.சி பேட்டியில் "தமிழ் -முஸ்லிம் கலவரம் பரவும் அபாயமிருந்தது." அதனால் வெளியேற்றினோம் என்கின்றார்.

9.முஸ்லிம் மக்கள் ஒரு சிறுபான்மை தேசிய இனம் என்ற அடிப்படையில், தமிழ் குறுந்தேசிய இனவாத அடிப்படையில் புலிகள் வெளியேற்றினர்.

முஸ்லிம் மக்கள் பற்றியும், அவர்களை தாக்கியது முதல் வெளியேற்றியதுக்கான காரணங்களையும் குறிப்பாக இப்படி தொகுக்க முடியும். இதில் ஒன்று முதல் மூன்றுவரையிலான காரணங்கள் பிழைப்புவாத அரசியலில் குளிர்காய விரும்புபவர்களின் கற்பனை புனைவுகளாக உள்ளது. நாலு முதல் எட்டு வரையிலான காரணத்தை அடிப்படையாகக் கொண்ட கண்ணோட்டங்கள், குறுந்தேசிய தமிழ் இனவாத அடக்குமுறையை நியாயப்படுத்தும் கருதுகோள்களாக உள்ளது. ஒன்பதாவது காரணமே பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் பகுப்பாய்வாகும். முஸ்லீம் மக்களின் வெளியேற்றப்பட்ட நிகழ்வை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தும் இந்த வாதங்களை தனித் தனியாக ஆராய்வோம்.

## புலிகள் இந்துத்துவ இயக்கமா? சாதி இயக்கமா? பிரதேசவாத இயக்கமா?

முதலாவதாக முஸ்லீம் மக்களை வெளியேற்றிய நிகழ்விலும் சரி, அவர்கள் மேலான தொடர்ச்சியான படுகொலை தாக்குதலில், புலிகள் இந்து மதவாதத்தை அல்லது வெள்ளார் உயர் சாதியத்தை அல்லது யாழ் பிரதேசவாதத்தை அல்லது மூன்றையும் இதற்கு அடிப்படையாக கையாண்டார்களா? கையாண்டார்கள் எனின் இது எந்த வகையில் கையாளப்பட்டது. எப்படி கையாண்டார்கள்? கையாண்டார்கள் என்று கூறுபவர்கள் யாரும் இதை ஆதாரமாக முன்வைப்பதில்லை.

புலிகள் என்ற அமைப்பு எதை அடிப்படையாக கொண்டு தனது குறுந் தமிழ் தேசியத்தை கட்டமைக்கின்றது. இந்த அடிப்படையான கேள்விக்கு பதிலளிக்காமல், யாரும் எதையும் ஆராய முடியாது. புலிகள் சாதியத்தை முன்வைக்கின்றார்களா? சாதியைச் சொல்லி இயக்கத்தை கட்டுகின்றார்களா? சாதியின் பெயரில் ஆள் திரட்டலில் ஈடுபடுகின் றார்களா? எனின், இல்லை என்பது தெளிவான பதிலாகும். சாதியத்தை தமது அமைப்பாக்கலில் முன்னிறுத்தி இயக்கத்தை கட்டவில்லை. அப்படி இருக்க, புலிகளை சாதிய அமைப்பு என்று கூறுவதில் எந்த அர்த்தமும் இருப்பதில்லை. அடுத்து இந்து மதத்தை அடைப்படையாக கொண்டு புலிகள் தம்மை கடடமைக்கின்றார்களா? மற்றைய மதங்களை இழிவாக காட்டி தம்மை உருவாக்கின்றார்களா? புலிகள் இந்து இயக்கமா எனின், இல்லை என்பது தெளிவான புதிலாகும். இது போன்று யாழ் பிரதேசவாதத்தை அடிப்படையாக கொண்டு தமது இயக்கத்தை உருவாக்கின்றார்களா? மற்றைய பிரதேச மக்களை இழிவாக்கி பிரச்சாரம் செய்து ஆட்களை சேர்க்கின்றார்களா? எனின் இல்லை என்பது தெளிவான பதிலாகும். இப்படியான பிரச்சாரத்தை புலிகள் செய்யின், புலிகள் என்ற இயக்கம் குறுங்குழுவாகி அதன் அளவில் அது எப்போதே சிதைந்து போயிருக்கும். இப்படி இல்லாத ஒரு நிலையில் தான் புலிகளின் குறுந் தமிழ் தேசிய இயக்கம் எம்மண்ணில் நீடிக்கின்றது. உயர் சாதியம், யாழ் பிரதேச மேலாண்மை, சைவ அடிப்படைவாதம் என்பன நிலப்பிரபுத்துவ கண்ணோட்டமாகும். இந்த வர்க்கம் தேசியத்துக்கான ஆயுதப் போராட்டத்தில் இருக்கவோ, நீடிக்கவோ முடியாது. இந்த நிலப் பிரபுத்துவ வர்க்கம் தேசியத்தால் தனது நலன்களை இழக்குமே ஒழிய, புதிதாக எதையும் அடைவதில்லை. சாதியத்தை முன்வைத்தால் சாதிப் பிளவும், பிரதேசத்தை முன் வைத்தால் பிரதேசப் பிளவும், சைவத்தை முன் வைத்தால் மதப்பிளவும், புலிகளின் குறுந் தமிழ் தேசிய போராட்டத்தை சிதைத்துவிடும். போராட்டத்தில் விதிவிலக்கான உதிரிச்சம்பவங்கள், ஒரு இயக்கத்தை மதிப்பிடும் எடுகோளாக எப்போதும் இருப்பதில்லை. விதிவிலக்கான சம்பவங்களில் தண்டனை கொடுக்கப்பட்டது உண்டு. கொடுக்கப் படாத நிகழ்வுகளும் நிகழ்ந்துள்ளது. சாதி குறைந்த பிரிவுகள் உயர் சாதிக்கு தண்டனை கொடுத்ததும் உண்டு. இதுபோல் மற்றவையும். இவை அனைத்தும் விதிவிலக்குகள்தான். அதாவது விதிவிலக்குகளுக்கு மேலான விதிவிலக்கு தான் இவை. ■

(தொடரும்....)

## மேற்கே தொலைந்த வாழ்வு



இதுவென்ன பரதேசிக் கோலமென்று
எங்கேனும் என்னைக் காணக்கிடைப்பின்
எமக்குள் நிறைந்த வறுமைகளையும்,
சோகங்களையும்
அப்போதே உணர்வாய் மனம் வருந்தி

அதுவரைக்கும் நீயோ அலைந்துகொண்டேயிரு

பச்சை மனசுகள் விம்மிப் புடைத்தபோது
இனி மழைவராத பாலைவனமாய்
உனக்குள் உள்ள பூமியில்தான்
தில்லியிலும், பர்மாவிலும், ஸ்பெயினிலும்
பரதேசிகளாய் அலைந்தோம்

அக்கணமே கருகிய இந்நூற்றாண்டின்
சுடர்வணத்தை கன காலமாகவே
கண்டுபிடிக்க முடியாமலே போய்விட்டது

மழிந்த நம்பிக்கைகளுடன் புறப்பட்டவர்களே
எங்கே தில்லி? எங்கே ராங்கூன்?
தாய்ப்பாலில் தொடங்கி சகதி வரைக்கும்-
தொடர்ந்தும்
அன்நியம்தானா நம்மை
ஆட்டிப்படைக்க வேண்டும்.?

-விடத்தல்தீவு ருஸ்தா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாவின் தலைவிதி

**கடந்த** மார்ச் மாதம் மூன்றாம் திகதி யாருமே எதிர்பார்க்காத நிகழ்வொன்று நடந்தேறியது. விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனது மிகவும் நெருங்கிய நம்பிக்கையாளராக இருந்த புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாணத்தளபதி கருணா அம்மான் பிரபாகரனது தலைமைத்துவத்திலிருந்து விலகியதே அச்சம்பவமாகும்.

கருணா அம்மானினது பலத்தினை தெற்கின் ஊடகங்கள் பல்வேறு விதமாக புகழ்ந்துள்ளன. புலிகள் அமைப்பின் ஆலோசகரான அன்டன் பாலசிங்கமினது மனைவியான அடெல் பாலசிங்கத்தினால் எழுதி வெளியிடப்பட்ட 'சுதந்திரத் தாகம்-தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தினை உள்ளிருந்து நோக்கல்' எனும் நூலில் கருணாவைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.



"அரசாங்க இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட 'ஜயசிக்குறு' (வெற்றி நிச்சயம்) போர் நடவடிக்கையின் போது முழு வன்னிப் பிரதேசத்தினையும் பாதுகாப்பதற்கு பிரபாகரன் உறுதி பூண்டார். இதனையிட்டு அவர் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தின் சிறப்புத் தளபதியாக கருணாவின் கீழ் செயல்பட்ட 'ஜயந்தன் படையணியை' வன்னிக்கு வரவழைத்தார். "இந்தப்படையணியானது போராட்டத்தின் நுணுக்கங்களை நன்கு அறிந்த அனுபவம் வாய்ந்த படையணியாகும். இதனால் இப்படையால் பல வெற்றிகளைப் பெற முடிந்திருக்கின்றது. வரலாற்றுப் புகழ் பெற்ற வன்னிப் போரின் போது பல பாரிய மாற்றங்களை ஏற்படுத்த இந்தப் படையணியால் முடிந்தது."

"இதன் காரணமாக புலிகளின் மத்தியில் கருணாவுக்கு பெரும் புகழும், மதிப்பும் கிடைத்தது. வன்னி மக்களும் நன்றியறிதலுடன், அன்புடன் அவரைப் புகழ்ந்தனர். கருணாவும் போர்க் கலையில் மிகவும் திறமையானவர். தனது அறிவினை விருத்தி செய்து கொள்வதற்காகவும், கூர்மைப்படுத்திக் கொள்வதற்கும் அவர் ஆர்வம் காட்டினார்.

'ஜயசிக்குறு' நடவடிக்கையின் போது வன்னிப் பிரதேசத்தினை அரசாங்க இராணுவத்தினரிடமிருந்து மீட்ட கருணா அக்கம்பக்கம் பார்த்தபோது, அப்பகுதியில் ஒரு சில நாய்களைத் தவிர எந்தவொரு மனிதரும் இருக்கவில்லையென்று அவர் அண்மையில் தெரிவித்தார். அப்படி இருந்த அந்தப் பிரதேசம் இப்போது சிறியதொரு சிங்கப்பூராக மாற்றமடைந்துள்ளதாகவும், வடக்கிலுள்ள புலித்தலைவர்கள் அங்கு படாடோபமான சுக வாழ்வினை வாழ்வதாகவும், ஆனால், கிழக்கின் போராளிகள் வடக்கின் தலைவர்களுக்காக தமது இன்னுயிரைப் பலியிடுவதாகவும் கருணா பிரபாகரனிடமிருந்து பிரிந்த பின்னர் தெரிவித்திருந்தார்.


கிழக்கிலிருக்கும் தனது படையணியிலுள்ள 1000 போராளிகளை வன்னிக்கு அனுப்பி வைக்குமாறு பிரபாகரன் வேண்டுகோள் விடுத்தபோது அதனை நிராகரித்தபடியினாலேயே கருணாவுக்கும், பிரபாகரனிற்குமிடையில் முரண்பாடுகள் தோன்றியதாகவும் சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. ஆனால், கருணா மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பதனால் அவற்றினை விசாரிப்பதற்காகவே அவர் வன்னிக்கு அழைக்கப்பட்டார் என்றும், அதனை அவர் மறுத்தார் என்றும் இன்னும் சில கருத்துக்கள் கூறப்படுகின்றது.

பிரபாவுக்கும், கருணாவுக்குமிடையில் தோன்றியுள்ள இந்த முரண்பாடானது இன்று நேற்று ஏற்பட்ட ஒன்றல்ல. இரண்டு வருட காலமாக இந்த முரண்பாடு தோன்றியதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒருமுறை கருணாவினது மனைவியான 'நீரா' பயணம் செய்த வாகனத்தில் அதிகளவிலான பணம் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. கருணா பல்வேறு பண மோசடிச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்றும் வன்னித்தலைமைகளினால் கூறப்படுகின்றது. மேலும், பெண் புலிகள் அணியின் தலைவியுடன் கருணா முறையற்ற தொடர்பினை கொண்டிருந்ததாகவும், இதனை அறிந்த அவரது மனைவி அது பற்றி பிரபாவிடம் முறையிட்டதாகவும் கூறப்பட்டது. எவ்வாறிருப்பினும், மேற்படி ஏதோவொரு காரணத்தினால் கருணா பிரபாகரனிடமிருந்து பிரிந்தார். 1984ல் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட கருணா ஆரம்பத்தில் பிரபாவினது தனிப்பட்ட பாதுகாவலனாக கடமையாற்றினார். இரண்டாவதாக, இரகசிய உளவுத்துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர், 1987ல் இருந்து மட்டக்களப்பு-அம்பாரை மாவட்ட ஆயுதப் பிரிவுத் தளபதியாகவும் கடமையாற்றினார்.

இவ்வாறானதொரு பின்னணியில் 20 வருட காலமாக புலிகள் அமைப்பில் இருந்து செயற்பட்ட கருணா கிழக்கு மாகாணத்தை விட்டும் அகன்று சென்றது எங்கே என்பதனை இப்போது யாருமே அறியவில்லை.

பிரபாகரனது முன்னணி எதிரிகள் மூவராவர். வரதராஜப் பெருமாளும், டக்ளஸ் தேவானந்தாவும் அவர்களுள் இருவராவர். ஏனைய அனைத்து இயக்கங்களின் தலைவர்களையும் கொன்றொழித்த பிரபாகரனால் இவர்களிருவரையும் கொன்றொழிக்க முடியவில்லை. மூன்றாவது எதிரிதான் ஆனந்த சங்கரி.

அவர்களுக்குப் புறம்பாக அவரால் தாங்கிக் கொள்ள முடியாத எதிரியாக கருணா உருவாகியுள்ளார். பிரபாவினது 21 வருட கால



போராட்ட வாழ்வில் அவரது அமைப்புக்குள்ளேயே அவருக்கு எதிராக தலை தூக்கியவர்கள் யாருமே இப்போது உயிருடன் இல்லை. அவ்வாறான சந்தேகத்திற்குரியவர்களும், சவால் விட்டவர்களும் கொல்லப்பட்டனர்.

2002இல் வன்னியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போது தனது இரண்டாமவராக பிரபாவினாலேயே பெயர் குறிப்பிடப்பட்ட கருணாவே தனக்கு சவால் விடுப்பார் என்பதனை அவர் அன்று கனவிலும் நினைத்திருக்கவில்லை. கருணா நீங்குவதாக அறிவித்தவுடன் பிரபா தனது செய்மதித் தொடர்புகள் அனைத்தையும் நிறுத்திக் கொண்டார். தானிருக்கும் இடத்தினை கருணா அறிந்துகொள்வார் என்பதே அதற்குக் காரணமாகும்.

ஆயுதப் பிரிவின் தளபதியாக இருந்த கருணாவிடம் இப்போதும் பலமான படையணி ஒன்று உள்ளது. அது கலைக்கப்பட்டதாக கூறப்படினும், இன்று வன்னிப் புலிகளுடன் கிழக்கில் அடிக்கடி மோதுபவர்கள் இவர்களே. ஆயுதங்களினாலேயே இதுவரை தனது வாழ்வினை கட்டியெழுப்பிய கருணா, ஆயுதங்களைப் பற்றி நன்கு அறிந்த கருணாவினால் தனது ஆயுதங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன என்று கூறுவதினை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. ■

-விவரண-

## சாளரம்
### சிங்கள ஊடகங்கள்...

## பஸ் வண்டியில் மோதுண்டு சிறுவன் அகால மரணம்!

**கடந்த** 12ம் திகதி நுரைச்சோலையில் வைத்து கற்பிட்டியிலிருந்து புத்தளம் நோக்கிவந்த பஸ் வண்டியொன்று வீதியால் சென்றுகொண்டிருந்த சிறுவனொருவனை மோதுண்டதால் 12 வயதுச் சிறுவன் அவ்விடத்திலேயே அகால மரணமடைந்தான். இச் சம்பவத்தினால் ஆத்திரமடைந்த மக்கள் அவ்விடத்திலேயே பஸ் வண்டியை தீவைத்துக் கொளுத்தினர். சாரதியை கற்பிட்டி பொலிசார் கைது செய்துள்ளனர்.

எம்.எச்.எம். அக்ரம். புத்தளம் செய்தியாளர்



VOVCOD அமைப்பு USAIDன் அனுசரணையுடன் கிண்ணியாப் பிரதேசத்தில் 16 கிராமங்களில் சமாதானமும், அபிவிருத்தியும் எனும் செயற்த்திட்டத்திற்கிணங்க ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள பள்ளிவாயல் தலைவர்கள், கோயில் தலைவர்கள், அதிபர்கள், கிராம நிலதாரிகள், சங்கத்தலைவர்கள், மகளிர் அணித்தலைவிகள், கிராமத்தலைவர்கள் போன்ற முக்கிய தலைவர்களை ஒன்றிணைத்து மூலக்குழுவாக அமைத்து இவர்களின் உதவியுடன் 16 கிராமத்திலிருந்து முஸ்லிம், தமிழ் 30 இளைஞர் யுவதிகளை தெரிவு செய்து 6 மாதகால சமாதான பயிற்சிப் பட்டறையை நடாத்தி இறுதியில் கிராம களப்பணி விஜயத்தை மேற்கொள்வதற்காக மூலக்குழு கலந்துரையாடலின் USAID நிறுவனத் திட்ட மேலாளர் பீ. பிரண்டா, மூலக்குழு உறுப்பினர் ஒருவரிடம் சமாதான பதாதை வாசகங்களை கையளிப்பதை படத்தில் காணலாம்.

(படமும், தகவலும்
கிண்ணியா செய்தியாளர் அ.மு.மு. றியாஸ்)

**I am a poet**
**Made of**
**Rock and Rose**



மனைவி மரணம்
வர்ணிக்க வார்த்தையில்லை
சந்தோஷத்தை

சொர்க்கம் நரகத்தை
நம்புகிறேன் நான்
ரோஜாவின் முட்கள்.

எனக்குத் திருமணம்
எல்லாம்மே என் Choice
மணமகனைத் தவிர.

படையே!
பாதை விலகிப் பயணி
குட்டிகரைக்குப் பாலூட்டும் நாய்.

அவர் மஹாரா பிரபல்யம்
அவருக்கோ
ரஹஸ்ஸ்ய வியாதி.

தாவரங்களின் தலைமுடிவெட்டி
சீவிச் சிங்காரிப்பான் தோட்டக்காரன்
பரட்டைத் தலையுடன்.

பெரிய்ய மனிதர்கள்
தூாரத்துத் தாமரைகள்
நெருங்கிப் பார்த்தால்
நெளியும் புழுக்கள்

சினிமா நடிகையின்
முன்னழகு பின்னழகு கண்டு
பெருமூச்சு விடாதே பிஞ்சு
அதில் பாதி பஞ்சு.

சீவிமுடித்துச் சிங்காரித்திருக்கும்
செல்வச் சீமான் வீட்டு
செல்ல நாய்க்குட்டி

உஸ்மான் மரிக்கார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரம்
## ஆங்கில ஊடகங்கள்

# இலங்கையின் சமாதான நடவடிக்கையில் ஏற்படும் பிரச்சினைகளின் உண்மை நிலை என்ன?

**முன்னாள்** பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவிற்கும், விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்குமிடையில் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையானது கடந்த 21-04-2003ம் திகதி புலிகளின் கடிதத்தின் மூலம் கால வரையறையின்றி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

உண்மையில் இந்த விடயத்தில் எல்.ரீ.ரீ.யினரது முடிவான கருத்து என்னவெனில் கடந்த 2002 செப்டம்பர் முதல் - 2003 மார்ச் மாதம் வரை ஒஸ்லோ தொடக்கம் ஹாகோன் வரை நடைபெற்ற ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் எதுவித பிரயோசனமுமில்லாமல் போய்விட்டது என்பதுதான்.

கடந்த 2002 பெப்ரவரி 22ம் திகதி நடைபெற்ற ரணில்-பிரபாகரன் சமாதான ஒப்பந்தமானது (CFA) யில் குறிப்பிட்டதன்படி இருதரப்பினரும் இராணுவ ஆயுத செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவந்து நிலையான சமாதானத்தை உண்டுபண்ணுவதற்காகவும். அதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதற்காகவும் இருதரப்பும் இதய சுத்தியுடன் உழைத்தல். அத்துடன் இருதரப்புக்குமிடையே "யுத்தம் மீண்டும் ஏற்பட்டுவிடாமல் பார்த்துக் கொள்ளல் என்பதையே வலியுறுத்துகிறது.

இவ்வாறு சமாதான ஒப்பந்தம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் பொழுதே எல்.ரீ.ரீ.யினரால் பலமுறை இவ் ஒப்பந்தம் மீறப்பட்டது என்பதை நாம் கானக்கூடியதாக இருக்கிறது. அதாவது புலிகள் இந்த சமாதான காலத்திலேயே அதிகமாக மனித உரிமைகளை மீறியிருக்கிறார்கள் மாற்றுக்கருத்துக்கொண்டவர்களை தமது எதிரிகளென்று கூறிக் கொண்டு கொன்றொழித்துள்ளார்கள்.

(ஐ.ம.சு.கூ) அரசாங்கம். புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை மிக விரைவில் ஆரம்பிப்போம் என்று தொடர்ந்தும் காலத்தை கழித்துக் கொண்டிருக்கிறார்கள். கிளிநொச்சியில் பிரபாகரனும் தொடர்ந்தும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையினை (ISGA) தந்தால்தான் பேச்சுவார்த்தைக்கு வருவோம் என்று கூறுகிறார். உண்மையில் இருபிரிவினரும் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்து சமாதான நடவடிக்கைகளிலும். பேச்சுவார்த்தைத் தீர்விலும் ஒரு பின்னடைவையே ஏற்படுத்தி வருவதை அவதானிக்க முடிகிறது. சமாதான பேச்சுவார்த்தை எப்போது ஆரம்பிக்கும்? அதற்கான காலவரையறை மற்றும் கால அட்டவணைகளை இதுவரைக்கும் அரசாங்கம் தயாரிக்கவில்லை. இது விடயத்தில் தொடர்ந்தும் இழுத்தடிப்புகளே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலைமையானது பொதுமக்களிடையே பெரும் அச்சத்தை உண்டுபண்ணியுள்ளது. மீண்டும் ஒரு யுத்தத்தை நோக்கி இருபிரிவினரும் சென்றுவிடுவார்களோ என்ற அச்சவுணர்வு அனைவரிடமும் தென்படத்தொடங்கியுள்ளது.

முழுமையாகப் புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையினையே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேவேளை இலங்கையின் அரசியல் யாப்பு முறைமையானது முழுக்க முழுக்க சிங்களதேசத்தை மையமாகக் கொண்டு சிங்களவர்களுக்குரிய அரசியல் சட்டமாக பாராளுமன்ற அரசியல் யாப்பு முறைமை இருக்கிறதென்று கூறும் புலிகள் இலங்கையின் அரசியல் யாப்பு முறைமைக்கு புறம்பாக தமக்கு முதலில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை (ISGA) யை தரவேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும் புலிகளைப் பொறுத்தவரை, அண்மையில் உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக ஒப்பந்தம் செய்ய வேண்டுமென்று கூறிய அரசாங்கத்தின் கருத்தை மறுதலித்து' அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வாறு தொடர்ந்தும்



அரசும் புலிகளும் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து கொண்டிருப்பதானது. இலங்கையில் இவ்விரு பிரிவினரிடமும் புரிந்துணர்வு குறைந்து மீண்டும் யுத்தம் ஏற்பட்டுவிடுமோ என்று சந்தேகமாவே இருக்கிறது. இது விடயத்தில் இரு பிரிவினரும் மிக நிதானமாக காய்களை நகர்த்தவேண்டியது மிகப் பொறுப்பு வாய்ந்த கடமையாகும்.

மேலும் ஜனாதிபதி தற்துணிவுடன், தனது நிறைவேற்று அதிகாரங்களை முழுமையாக பாவிப்பதற்கு தயாராகிவருகின்றரென்று ஆய்வாளர்கள் கருத்துத்தெரிவிக்கிறார்கள். அண்மையில் ஐ.ம.சு.கூ. பின் தலைமைத்துவ பொறுப்பை இராஜினாமாச் செய்தது பொறுப்பு சொல்ல வேண்டிய நிலையிலிருந்து ஜனாதிபதி விலகிக் கொண்டதாக அவர் நினைத்தாலும் நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் பொறுப்புக்களையும், அவரது அதிகாரங்களையும் ஒழுங்காகவும், சரியாகவும் பாவிக்கவேண்டிய கடப்பாடு அவருக்குள்ளது.

எனவே இலங்கையில் சமாதான ஒப்பந்தம் அமுலில் இருக்கின்ற இவ் வேளையில் ஜனாதிபதி உறுதியான முடிவை எடுத்து, மேலும் காலத்தை இழுத்தடித்து வீணடிக்காமல் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான கதவை ஒழுங்காக திறந்து அரசாங்கமும், எல்.ரீ.ரீ.யும் உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும்.

நன்றி : டெய்லி மிரர்.

# யஸீர் அரபாத் விரட்டியடிக்கப்படுவார் அல்லது கொல்லப்படுவார்

## இஸ்ரேல் எச்சரிக்கை!

**ப**லஸ்தீன ஜனாதிபதி யஸீர் அரபாத் விரைவில் விரட்டியடிக்கப்படுவார் என இஸ்ரேல் தெரிவிக்கிறது. அரபாத்துக்கு எமக்கிடையில் இடமில்லை. அவரை அதிகாரத்திலிருந்து தூக்கியெறியும் தினம் வெகு தூரத்திலில்லை என்று இஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சர் சில்வன் ஷலொம் தெரிவித்தார்.



நான்கு வருடங்களுக்கு முன் இஸ்ரேலுக்கு எதிராக பலஸ்தீனம் போராட முற்பட்டபோது இடம்பெற்ற வன்முறைகளுக்கு அனுமதியளித்தாரென இஸ்ரேலும், அமெரிக்காவும் அரபாத் மீது குற்றம் சுமத்துகின்றன.

ஆனால், 02 வருட காலமாக தமது மேற்குக் கரையில் அமைந்துள்ள தலைமையகத்தில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள 75 வயதுடைய அரபாத் இந்தக் குற்றச்சாட்டினை நிராகரித்துள்ளார்.

ஷலொம் தமது லிகுட் கட்சிக்காக வெளியிட்ட இந்தக் கூற்றினை இஸ்ரேலிலுள்ள அனைத்து வானொலி, தொலைக்காட்சி சேவைகளும் ஒலிபரப்பின. இந்த வாரத்தில் இது 02வது கூற்றாகும். அரபாத்தினை விரட்டியடிப்பதற்காக ஒரு வருடத்திற்கு முன் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானமாது இப்போதைக்கும் செல்லுபடியாகுமென்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஷாவுல் மோசப் அண்மையில் தெரிவித்தார்.

காஸா பள்ளத்தாக்கில் அமைந்துள்ள இஸ்ரேலிய குடியேற்றத்தினை அகற்றுவதற்கு இஸ்ரேலிய அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தினை செயற்படுத்த முடியாதுள்ளதால், இந்த அமைச்சரவை தீர்மானமும் செயற்படுத்தப்படாமல் தள்ளிவைக்கப்பட்டுள்ளது என்று மோசப் தெரிவித்தார். எப்படியிருப்பினும் இஸ்ரேலின் நண்பனான அமெரிக்காவானது அரபாத் தூக்கியெறியப்படுவதனை அங்கீகரிக்காது.

# முஸ்லிம் திருமண – விவாகரத்து சட்டத்தினை திருத்துவதற்கான குழு

**மு**ஸ்லிம் திருமண-விவாகரத்து சட்டமானது இக்காலத்திற்குப் பொருந்தாதது என்பது அநேகமானோரினது அபிப்பிராயமாகும். ஆகவே. அந்த சட்டத்தினைத் திருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று நீதி மற்றும் நீதி புனரமைப்புக்கான அமைச்சர் ஜோன் செனவிரத்ன அகில இலங்கை மௌலவிமார் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் அண்மையில் நீதி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இதனைத் தெரிவித்தார்.

முஸ்லிம் திருமண சட்டத்திலுள்ள குறைபாடுகள் மற்றும் அது திருத்தப்பட வேண்டிய முறை ஆகியன பற்றி அமைச்சரிடம் பிரஸ்தாபிப்பதற்காகவே அந்த அமைப்பினால் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கமைக்கப்பட்டது.

அமைச்சர் மேலும் கூறுகையில். முஸ்லிம் திருமண-விவாகரத்து சட்டத்தினை திருத்தியமைக்குமாறு பல தரப்பாரிமிருந்தும் வேண்டுகோள்கள் விடுக்கப்படுகின்றன. அது இஸ்லாத்திற்கு உகந்த வேண்டுகோளாகுமென்பதனை நான் ஏற்றுக் கொள்கிறேன். தற்போது நடைமுறையிலுள்ள சட்டமானது 1956 லேயே சட்டமாக்கப்பட்டது. அதில் குறைபாடுகள் இருப்பின் அவைகளைத்திருத்துவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு கருத்துக்களும், யோசனைகளும் பெறப்படும். அதன்பிறகு திருத்த வேலைகளை ஆரம்பிக்கலாம்.

முஸ்லிம்கள் இன்று மக்கள் மத்தியில் அதியுயர் பதவிகளை வகிப்பதுடன் பல கல்விமான்களையும். புத்திஜீவிகளையும் கொண்ட ஓர் உயர் சமூகமாகவும் விளங்குகிறது. அதற்கமைய அவர்களினது சமூகத்திற்கும். மக்களினது வாழ்வுக்கும் உறுதுணையாகும் சட்டத்தினை பொருத்தமான முறையில் மாற்றியமைக்கவேண்டும்.

முஸ்லிம் திருமண-விவாகரத்து தொடர்பான கைங்கரியங்களை கவனிக்கின்ற காதிமான்களை நியமிக்கும் போது அவர்களின் கல்வித்தரம் மற்றும் வேறு தகைமைகள் கருத்திற்கொள்ளப்படுவதில்லை என இந்த கலந்துரையாடலின்போது சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து எதிர்காலத்தில் அதுவிடயமாகவும் கவனம் செலுத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# வாழ்வினை வேண்டி மரடோனா கதறல்

**ம**ரடோனா எனும் பெயரினையும். காற்பந்தினையும் பிரிக்க முடியாது. ஆர்ஜன்டீனாவுக்கு உலக காற்பந்து கிரீடத்தினை கொண்டுவந்த முன்னோடி என்று மரடோனாவினது பெயரானது வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.



கடந்த காலத்தில் அவர் கடுமையான முறையின் 'கொகேன்' எனும் போதைப் பொருளுக்கு அடிமையாகியிருந்தார். இதன் காரணமாக காற்பந்துலகில் உச்சியில் வீற்றிருந்த மரடோனா சறுக்கு மரத்தில் இருந்தவரைப் போன்று வீழ்ச்சியுற்றார். காற்பந்து விளையாட்டுத் திடலிலிருந்து அவர் வெளியே தூக்கியெறியப்பட்ட போது விளையாட்டு அபிமானிகள் திடுக்கிட்டு பார்த்துக் கொண்டிருந்தனர். கடந்த சில மாதங்களில் மனோதத்துவ சிகிச்சைகளின் மூலம் போதைப்பொருள்பாவனையிலிருந்து மரடோனா மீண்டுள்ளார்.

'கொகேன்' காரணமாக உடல் ரீதியாக விளைந்துள்ள வீழ்ச்சியினை மீண்டும் புனரமைப்பு செய்யவேண்டியுள்ளது. இதற்குத் தேவையான சிகிச்சையினை மேற்கொள்வதற்காக கியூபாவுக்குச் செல்வதற்கு அவர் அனுமதி கோருகிறார். தற்போது 43 வயதான மரடோனாவை விளையாட்டு அபிமானிகள் மறந்து விடுவார்களா? கோல்கம்பத்திற்கிடையில் பந்தினை திணிக்கும் அவரது அபாரத்தாக்குதலினை யாரால் மறக்க முடியும்? சிகிச்சையினை மேற்கொள்வதற்காக தான் கியூபாவுக்குச் செல்வதற்கு தன்னை அனுமதியளிக்குமாறு தொலைக்காட்சி திரையின் ஊடாக அவர் கதறியழுதபடி ஆர்ஜன்டினா ஆட்சியாளர்களை கோரினார். ஆனால் அரசாங்கம் அதற்கு இன்னும் அனுமதி அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்களுக்கு இரவில் கண் தெரியுமா?



மீன்களுக்கு இரவில் கண் தெரியுமா என்று யாரேனும் கேட்டால் நீங்கள் என்ன கூறுவீர்கள்? கண் தெரியாது என்று கூறுவீர்களா? அப்படியாயின் உங்கள் பதில் சரி. மீன்களுக்கு இரவில் கண் தெரியாதுதான். ஆனால் வேறு தொடர்பூடகங்கள் மூலம் அவை தமது உணவினைத் தேடிக்கொள்கின்றன. 'என்க்லர்' எனும் மீனானது வழியினை கண்டுபிடிப்பதற்காக தனது ஒளியினையே பாய்ச்சிக் கொள்கிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

சமுத்திரத்தில் பல்வேறு வகையான மீன்கள் உள்ளன. இவை தண்ணீரின் மேல் பகுதியிலும், ஆழமான பகுதியிலும் வசிக்கின்றன. சமுத்திரத்தின் சில பகுதிகளில் சூரிய ஒளி மிகக் குறைவாகவே உள்ளது. அதனை விட ஆழத்தில் சூரிய ஒளியே படாது. அத்தகைய பகுதிகளில் வசிக்கும் மீன்கள் தமது உடலிலுள்ள உணர்வூட்டிகள் மூலம் வழியினைக் கண்டுபிடிப்பதுடன் தமது ஆகாரத்தினையும் தேடிக்கொள்கின்றன.




## உண்மை உபதேசம்

அல்லாஹ்வை என்னாளும் நினைத்திடு
அல்-குர்ஆனை எப்போதும் ஓதிடு!
நபிசொன்னவழி நாளும் நடந்திடு
நல்லதையே செய்ய துணிந்திடு!

தியாகத்தின் வழி நாடு
தீங்கிழைக்காமல் தினம் வாழு!
பாசத்தை பாரிலே காட்டு
பண்போடு காலத்தை ஓட்டு!

தாயை நித்தமும் மதித்திடு
தரணியிலே மறுமைக்காய் உழைத்திடு!
உண்மையாய் வாழ்நாள் வாழ்ந்திடு
ஊர் உன்பெயர்போற்ற வாழ்வை நடத்திடு!

மறுமையை நெஞ்சில் நிறுத்திடு
மஃஸரை நினைத்து அழுதிடு!
மண்ணறை வாழ்வை எண்ணிடு
மகத்தான கலிமாவோடு மறைந்திடு!

சொன்னதைக் கேட்டு வாழ்ந்திடு
சொர்க்கத்திற்கு செல்ல முயன்றிடு!
அனைத்தும் பாரில்பொய்
எனநினைத்திடு
அல்லாஹ்வும் அண்ணலாரும்
மெய்யெனநினைத்திடு!

எஸ்.எம். றிஸ்வான் - கிண்ணியா - 03.

## ஆர்வம் வெற்றியின் முதற்படியாகும்

ஆர்வம் என்பது சோம்பேறித்தனமின்றி உத்வேகத்துடன் செயற்படுவதாகும். வெற்றியென்பது அதன் பெறுபேறாகும். உதாரணமாக முதலாம் வகுப்பில் சேர்க்கப்படுகின்ற மாணவனொருவன் ஆர்வத்துடன் படித்தால் இரண்டாம் வகுப்பிற்கு சித்தியடைவான். இப்படியே நான்காம் வகுப்பில் ஆர்வத்துடன் படித்தால் ஐந்தாம் வகுப்பிற்கு சித்தியடைவான். ஐந்தாம் வகுப்பில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால் அந்த மாணவனுக்கு உயர்தரம் வரை அரசாங்கத்தினால் உதவியாக ஒரு தொகைப் பணம் வழங்கப்படும். அதே வேளை, அம்மாணவனுக்கு பிரசித்திபெற்ற பாடசாலையொன்றிலும் கல்வி கற்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும். பெற்றோர்களும் அம்மாணவனுக்கு சிறந்த கல்வியினை புகட்டுவதற்கு முனைவார்கள். அதன் காரணமாக அந்த மாணவன் சாதாரண




தரத்திலும் திறமையாகச் சித்தியடைந்து உயர் தரத்திற்கும் அதனைத் தொடர்ந்து பல்கலைக் கழகத்திற்கும் தெரிவாவான்.


இப்படியே அவன் தனது வாழ்க்கையில் முன்னேறி சிறந்த கல்விமானாகவும், உயர் பதவியொன்றினை வகிப்பவனாகவும், எதிர்காலத்தில் ஓர் செல்வந்தனாகவும் மாறுவான். சமூகம் அவனை மதிக்கும். இவை அனைத்திற்கும் ஆர்வமே பிரதான காரணமாகும்.

## ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!

4ஆம் ஆண்டுக்குக் கீழ் கல்விகற்கும் மாணவ மாணவிகள் இந்தப் போட்டியில் பங்குகொள்ள முடியும். விடைகளை செப்டம்பர் 30ம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றிபெற்றவர்களுக்கு சிறுவர் நூல்கள் பரிசாக அனுப்பிவைக்கப்படும்.

முஸ்லிம் குரல்
வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்
119/15, விவியன் குணவர்தன மாவத்த,
வெல்லம்பிட்டிய.





## வெற்றி பெற்றவர்கள்!

விடுகதைப் போட்டி - இல 01 இல் வெற்றிபெற்றவர்.

**ஜே.எம். பஸ்னா**
ஆண்டு 8A
பாத்திமா பாலிகா மகாவித்தியாலயம்
ஓட்டமாவடி.


வர்ணம் தீட்டுங்கள் போட்டி - 02இல் வெற்றிபெற்றவர்

**என்.எஸ்.எப். சபானா**
பள்ளிவாசல்துறை
புத்தளம்.

வெற்றிபெற்றவர்களுக்கு சிறுவர் நூல்கள் பரிசாக அனுப்பிவைக்கப்படும்




# சிறுநீரக நோய்



சிறுநீரக நோயினைப் பற்றி இன்று அதிகளவில் பேசப்படுகிறது. சிறுநீரகங்களில் கல் மற்றும் சிறுநீரகம் பழுதடைதல் ஆகியன அவற்றுள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. ஆகவே, சிறுநீரக நோயினையிட்டு ஆரம்பத்திலிருந்தே அறிந்து கொள்வது முக்கியமாகும்.

சிறுநீரகத்தில் ஏதேனும் நோய் தோன்றினால் சிறுநீர்ப்பரிசோதனையின் போதே அது தெரியவரும். பொதுவாக ஒரு நபர் நாளொன்றுக்கு 4 – 5 தடவை சிறுநீர் கழிப்பார். இந்த ஒவ்வொரு தடவையும் 300–400 மில்லி லீட்டர் சிறுநீர் கழியும். சில சமயங்களில் சிறுநீரினது அளவு கூடும்; குறையும்.

சிறுநீர் குறைவடைவதற்குக் காரணம் நீர்ப்பற்றாக்குறையாகும். அதுவன்றி சிறுநீர் கழிவது குறைவுபடுமானால் இது கவனம் செலுத்தப்பட வேண்டிய நிலைமையாகும். சிறுநீரகக் கோளாறு காரணமாகவும் இவ்வாறு நேரலாம். இதற்குப் புறம்பாக கீழ்க்காணும் விடயங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

01. சிறுநீருடன் இரத்தம் வெளியேறல்
02. சிறுநீருடன் மண்வெளியேறுதல்
03. சிறுநீரினது நிறம் மாறுதல்
04. சிறுநீர் வெளியேறும்போது எரிவு ஏற்படல்
05. சிறுநீரில் நுரைத்தன்மை

மேற்படி அறிகுறிகள் தென்படுமாயின் மருத்துவரை சந்திப்பதே மிகவும் முக்கியமாகும்.



# தலைவலி

தலைவலி என்பதோர் நோயல்ல; நோயொன்றின் அறிகுறியாகும். பல்வேறு விதமான நோய்கள் காரணமாக தலைவலி ஏற்படக்கூடும். மூளை சம்பந்தப்பட்ட நோய்களுக்கு மட்டுமே தலைவலி ஏற்படும் என்பதில்லை. கண்கள் சம்பந்தப்பட்ட நோய்களினாலும் தலைவலி ஏற்படக்கூடும். சைனஸ் எனும் பிரதேசத்தில் சளி நிரம்புவதாலும் தலைவலி ஏற்படும். அதேபோன்று காது நோய்களினாலும் தலைவலி ஏற்படும். அதேபோன்று, பல்வேறு மனக்குழப்பங்களினாலும் தலைவலி ஏற்படும்.

காதுகளிரண்டையும், நாசியினையும் இணைக்கும் முக்கோணப் பகுதியானது எமது உடலின் மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாகும். இப்பகுதியில் விளையும் சிறியதொரு காயத்தினால்கூட மூளைக்கு நோய்க்கிருமிகள் உட்புக வாய்ப்புள்ளது. ஆகவே, சிறிய காயமாயினும் உடனடி சிகிற்சையினை மேற்கொள்ள வேண்டும். மேலும், முகத்தினை எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

கடுமையான தலைவலி அல்லது தலைவலியுடன் கூடிய வேறு நோய் அறிகுறி தென்படுமாயின் உடனடியாக மருத்துவ ஆலோசனையினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வலியுறுத்திக் கூறப்பட வேண்டியது யாதெனில், தவறாமல் மருத்துவரினால் பரிந்துரை செய்யப்படுகின்ற மருந்துகளை மட்டுமே உரிய முறையில் பயன்படுத்த வேண்டுமென்பதே.

# அளவோடு உண்ண வேண்டும்!

நிறையுணவின் முக்கியத்துவத்தினை நாம் பாடசாலைகளில் கற்றிருக்கிறோம். ஆனால், சிறு பிள்ளைகள் தமக்கு விருப்பமான உணவினையே அதிகமாக உண்ணுகின்றனரே தவிர போஷாக்கான உணவொன்றினைப் பற்றி சிந்தித்துப்பார்ப்பதில்லை.



ஆரோக்கியமான வாழ்வுக்குத் தேவையான பலத்தினை 07 விதமான போஷாக்கான உணவு பதார்த்தங்களிலிருந்து பெறக்கூடியதாக உள்ளது. இந்த ஒவ்வொரு உணவு பதார்த்தங்களிலிருந்தும் நாம் போசாக்கினை பெற்றுக்கொள்ளவேண்டியது கட்டாயமாகும். அவையாவன:

01. தானியங்களும், கிழங்கு வகைகளும்
02. பழங்கள்
03. மரக்கறிவகை
04. பாலும், பால் உணவுகளும்
05. மீன்வகை, விதைகள், வித்திலைகள்
06. இறைச்சி, முட்டை
07. எண்ணெய் அதிகமுள்ள விதைகளும், கொட்டைகளும்.

நாம் உணவாகக் கொள்ளும் மரக்கறி வகை, பழங்கள், தானியங்கள் ஆகியவற்றினை அதிகவிலை கொடுத்து வாங்கவேண்டியுள்ளது. ஆகவே, சுத்தம் பற்றி 100 சதவீதம் உறுதிப்படுத்த முடியாது. ஆகவே, உணவு தயாரிப்பதற்கு முன் அவற்றினை நன்கு கழுவியெடுப்பதன் மூலம் மரக்கறி, பழங்கள் மீது படிந்துள்ள களைநாசினிகளினது நச்சுத் தன்மையினை போக்க முடியும். சில இரசாயனங்கள் அவற்றினை ஊடுருத்தும் செல்லக்கூடும். இதனை கவனமாக ஆராய வேண்டும். அடைக்கப்பட்ட உணவு பதார்த்தங்களினை வாங்குவதற்கு முன் அதன் காலாவதி திகதியில் கவனம் செலுத்த வேண்டும்.

எவ்வாறான உணவாக இருப்பினும் அதனை அளவோடு உண்ணப்பழக வேண்டும். ஏனெனில், அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலுமோரு பாரிய யுத்தம்

**21ஆம்** நூற்றாண்டில் உலகில் மேலுமோர் அதிபயங்கர யுத்தமொன்று மூழ்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகிய யுத்தங்களைக் காட்டிலும் இந்த யுத்தமானது அதிபயங்கரமானதாகும். ஒரு கையில் புறாவினையும், மறு கையில் ஆயுதத்தினையும் ஏந்தியபடி இதிலும் முன்னணி வகிக்கப்போவது உலகப் பொலிஸ்காரனான அமெரிக்காவே என்பது சர்வதேச விமர்சகர்களினது அபிப்பிராயமாகும். உலக சமாதானத்தினை ஸ்தாபிப்பதற்காக வேண்டி தனது எதிரிகளை அடக்கி ஒடுக்குவதற்கு அமெரிக்கா மேலுமொரு யுத்தத்திற்குத் தயாராகிறது என்றும் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

இன்றைய உலக செய்திகளிள் முதலிடம் வகிப்பது வடகொரியாவினது அணு ஆயுத உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் அதனை அமெரிக்கா எதிர்ப்பது தொடர்பான செய்திகளே. அணு குண்டொன்றினை முழங்க வைத்து உலகில் பாரிய அழிவொன்றினை ஏற்படுத்துவதற்கு வடகொரியா திட்டமிட்டுள்ளது என கடந்த 21 மாதங்களாக அமெரிக்கா குற்றம்சாட்டி வருவதோடு, வடகொரியாவை அச்சுறுத்தியும் வருகிறது.

இந்த அனைத்து குற்றச்சாட்டுக்களையும், அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது, அஞ்சாது, அசையாது உறுதியான கொள் கையினைக் கடைப்பிடிக்கின்ற வடகொரிய



ஜனாதிபதி கிம்ஜொன் கில் அவர்களினுடைய போக்கானது அமெரிக்காவினை மேலும் ஆத்திரமடைய வைத்துள்ளதுடன் தீராத பகைக்கும் காரணமாகியுள்ளது.

அமெரிக்காவுக்கும், வடகொரியாவுக்கும் இடையிலான முறுகல் நிலையானது கடந்தவாரம் மிகவும் கடுமையான நிலைக்குத் தள்ளப்பட்டது. ஒரு சில வாரங்களுக்கு முன் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷினால் அணு ஆயுத உற்பத்தி நடவடிக்கையினை உடனடியாக நிறுத்துமாறு வடகொரியாவுக்கு கடைசி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் நவம்பர் 25ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு முன் வடகொரியாவுக்கு ஓர் பாடம் கற்பிக்க வேண்டுமென்பதே புஷ்ஷினது நோக்கமாகும் என்பது சர்வதேச அரசியல் விமர்சகர்களினது அபிப்பிராயமாகும். சீனா, ரஷ்யா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகளுடன் இணைந்து கடந்த 02 வருட காலமாக வடகொரியாவினது அணு ஆயுத உற்பத்தி நடவடிக்கையினை நிறுத்துவதற்குப் பாரிய முயற்சியினை அமெரிக்கா மேற்கொண்டது. இந்த முயற்சி வெற்றியளிக்காததன் காரணமாக அமெரிக்க ஜனாதிபதி கடும் கோபமுற்றிருக்கிறார் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. ஈராக்கின் சதாம் ஹுசைனைக் காட்டிலும் வடகொரியாவின் ஆட்சியாளரான கிம்ஜொன் கில் தற்போது அமெரிக்காவின் முதலாம் இலக்க எதிரியாக கருதப்படுகிறார் என சில சர்வதேச பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

வடகொரியா ஜனாதிபதியின் நடவடிக்கையானது ஆசியாவுக்கு மட்டுமல்ல முழு உலகத்தினதும் அழிவுக்கு காரணமாகலாமென வெளிநாட்டு பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. கடந்த 29ஆம் திகதிதான் வடகொரிய பிரச்சினையின் உச்சகட்டமாகும். வடகொரிய அரசாங்கம் ஐ.நா அமைப்பின் செயலாளர் நாயகமான கொபி அன்னானுக்கு அன்றைய தினம் அனுப்பிவைத்த கடிதத்தில், வடக்கு-கிழக்கு கொரிய எல்லையில் கடந்த 50 வருட காலத்திற்கும் மேல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 37.500 அமெரிக்கத் துருப்பினரை உடனடியாக அங்கிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு குறிப்பிட்டிருந்தது. இந்தக் கோரிக்கையினால் ஆத்திரமுற்றுள்ள புஷ் வடகொரியாவினை ஆக்கிரமிப்பதற்கு திட்டமிட்டுள்ளார் என்று அஸோஸியேடட் பிரஸ் தெரிவிக்கிறது. ஆகவே, தற்போது வடகொரியாவானது உலகத்தவரின் கவனத்தை ஈர்த்துள்ள பிரதான நாடாக மாறியுள்ளது. ■

## படைப்பாளர் கவனத்திற்கு!

கட்டுரைகள் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமலும், சிறுகதைகள் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும் கவிதைகள் நாற்பது வரிகள் தொடக்கம் ஐம்பது வரிகளுக்கு மேற்படாமலும் எழுதப்படுவது வரவேற்கத்தக்கது.

விடயத்தை சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி அனுப்புங்கள். அதே நேரம் தாளில் ஒருபக்கமே ஆக்கங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

-பிரதம ஆசிரியர்-

# சனத்தொகை அதிகரிப்பும் உலகின் நிலையும்

உலக சனத்தொகையானது நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. ஆனால், சனத்தொகை அதிகரிப்பிற்கு சமனாக பூமியில் இடவசதி, வளங்கள் அதிகரிக்கப் போவதில்லை. ஆகவே, மனிதனுக்கு உலகில், போதுமான இடவசதி, வாழ்வதற்கான வளங்கள் வேகமாக குறைவடைகிறது. உணவு உற்பத்தி தொடக்கம் வேறு அனைத்து காரியங்களிலும் பாரிய சிக்கல் எதிர்காலத்தில் ஏற்படும் என்பதே இதன் மறுகூற்றாகும்.

# மகிழ்ச்சியின் உச்சம்!



**எங்கே** உள்ளது மகிழ்ச்சி? மகிழ்ச்சியினை அடைந்து கொள்வது எவ்வாறு? 70 வருடங்களுக்கும் மேலாக ஒருவரினது உண்மையான மகிழ்ச்சியானது எவ்வாறான முறையில் நிலவுகிறது என்பது பற்றி விஞ்ஞானிகள் ஆராய்ந்துள்ளனர். மகிழ்ச்சியானவர்களை மற்றும் மகிழ்ச்சியற்றவர்களை வேறு வேறாக பிரித்து ஆராய்ந்த போது எவ்வித முடிவுக்கும் ஆராய்ச்சியாளர்களால் வரமுடியவில்லை. ஆனால் ஒருவரது உள்ளத்தில் உண்மையான மகிழ்ச்சி ஏற்படுவதற்குத் தேவையான 10 ஆதாரங்களை கண்டறிய விஞ்ஞானிகளால் முடிந்துள்ளது அவை.

1. செல்வம் 2.ஆசை. 3. அறிவு 4. மரபணு 5. அழகு 6. நட்பு 7. திருமணம் 8. மதநம்பிக்கை 9. தியானம் 10. வயது




# எவரெஸ்ட் சிகரத்தில் அமைந்துள்ள மருத்துவமனை

**எவரெஸ்ட்** சிகரத்தில் கடல் மட்டத்திலிருந்து 17.500 அடி உயரத்தில் இந்த மருத்துவமனை அமைந்துள்ளது. இங்கு விஷேடமாக குறிப்பிடப்பட வேண்டிய அம்சம் என்னவெனில் இவ் வைத்தியசாலையை உருவாக்கியவர் 45 வயதான லூஆன் பிரே என்ற பெண் வைத்தியரே. எவரெஸ்ட் சிகரத்திற்குச் செல்பவர்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்குவதற்காக தானாகவே முன்வந்த இவர் எவரெஸ்ட் சிகரத்தில் சிறிய மருத்துவமனையொன்றினை அமைத்தார். இந்த மருத்துவமனையானது எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவோருக்கு சிறந்த புகலிடமாக அமைந்துள்ளது.



வருடம் தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் எவரெஸ்டில் ஏறுகின்றனர்: அப்போது அவர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளிற்கு உதவுவதே இவரது அடிப்படை குறிக்கோளாகும். அவரது இந்த சேவையானது வாழ்வுக்கும் மரணத்திற்கும் இடையிலான போராட்டமாகும். பனிப்புயலின் காரணமாக எவரெஸ்ட் சிகரமானது மூடிக்கொள்ளும்போது அவர் தொடர்ந்தும் இவ் மருத்துவமனையில் சேவையாற்றுவது வியப்புக்குரியதே.

# முன்னேற்றத்தின் பொற்கதவினை திறக்க வேண்டுமானால் சுயதொழில் ஒன்றினை ஆரம்பியுங்கள்

**தனிநபர்** வாழ்வில் வெற்றியினை ஈட்டிக்கொள்வதற்காக பல்வேறு நபர்கள் பல்வேறு துறைகளில் முயற்சிகளை மேற்கொள்கின்றனர். நாம் அனைவருமே சமூக அந்தஸ்த்தை அடைந்து கொள்வதற்கும், ஆளுமையைக் கட்டியெழுப்புவதற்காகவும், பொருளாதார, சமூக, மனநிலை ஆகிய துறைகளின் ஊடாக உயர் மட்டத்தினை சென்றடைவதற்காகவும் ஒரு வகையில் சுயதொழிலில் ஈடுபட வேண்டியுள்ளது.

'சிந்தியுங்கள் பழைய செங்கற்களினால் புதிய வீடொன்றினை கட்ட முடியும்' தூரப்பயணம் மேற்கொள்வதற்கு முதலில் ஒரு அடி எடுத்து வைக்கப்படவேண்டும் என்றொரு சீனப் பழமொழி உண்டு. சிறிய அளவில் ஆரம்பியுங்கள். படிகளின் மூலம் மேலே ஏறுங்கள். லிப்டில் ஏற வேண்டாம் என்றும் கூறப்படுகிறது. தடுக்கி விழுந்தால் அடுத்த படியில் தான் விழ நேரும். ஆனால், லிப்ட் உடைந்து விழுந்தால் உயிருக்கே ஆபத்தாகிவிடும். தேவையான பயிற்சியினையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

'தட்டுங்கள் திறக்கப்படும்' நீங்கள் 10 வீட்டுக் கதவுகளைத் தட்டினால் ஒரு வீட்டுக் கதவேனும் உங்களுக்காக திறக்கப்படும் அதற்காக உங்கள் மனதினை ஒருநிலைப்படுத்திக் கொள்ளுங்கள். 'உங்களால் ஏதேனும் செய்யமுடியுமென நீங்கள் நம்பினீர்களானால், உங்களால் அதனைச் செய்ய முடியும். அது பற்றிய போதிய அறிவு இன்றேல் கற்றுக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் 14வது நவீன பல்கலைக்கழகம் ஊவா மாகாணத்தில் அமைக்கப்படும்

**இலங்கையின்** 14வது பல்கலைக்கழகத்தை ஊவா மாகாணத்தில் உள்ள பண்டாரவள நகரத்தில் அமைப்பதற்கு அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. இந்த நவீன பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் அடுத்த வருடம் ஜனவரியில் ஆரம்பிக்கப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) தெரிவித்துள்ளது.

பண்டாரவளையில் அமைக்கப்படவிருக்கும் மிகப்பெரிய நவீன முறைமையிலான இந்த பல்கலைக்கழகத்தின் பீடங்களுக்கான கட்டடத்தொகுதிகள் பிந்துனுவெவ. புத்தள. பதுளை. ராகுன்கல ஆகிய இடங்களில் அமைக்கப்படவிருக்கின்றன.

அத்துடன் ஏனைய பல்கலைக்கழகங்களில் இல்லாத இயற்கை எழில்தோற்றம் சம்பந்தமான கட்டிடக்கலை (Landscape Architecture) எனும் கற்கைநெறி உட்பட புதிய 17 பட்டப்படிப்பு கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், ஆரம்பக்கட்டமாக 06 திணைக்களங்களுடன் கூடிய மூன்று பீடங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் 100 மாணவர்கள் வீதம் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஊவா மாகாணம்தான் இலங்கையில் ஒரு தேசிய பல்கலைக்கழகத்தை கொண்டிராத மாகாணமாகும். இங்கு 14வது பல்கலைக்கழகத்தை அமைக்க கல்வி அமைச்சும், பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவும் எடுத்துள்ள முடிவு மிகவும் சிறந்த முடிவு என்று பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், சுகாதார சேவைகள் அமைச்சருமான நிமல் சிறிபால டி. சில்வா மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

## சாய்ந்தமருது பிரதேசத்தில் பொலிஸ் ரோந்து!

சாய்ந்தமருதூர்ப் பிரதேசத்தில் இரவு நேரவேளைகளில் அடிக்கடி பொலிஸ் மற்றும் அதிரடிப் படையினரால் துவிச் சக்கர வண்டி மோட்டார் வாகனங்கள் அனைத்தும் சோதனையிடப்பட்டு வருகிறது. இரவு நேரத்தில் ரோந்து நடவடிக்கைகளையும் அவதானிக்க முடிகிறது. அண்மைக்காலமாக இப்பகுதிகளில் இடம்பெற்றுவரும் படுகொலைகள் காரணமாக பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு பாதுகாப்புப் பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஏ.எல். அன்ஸார். சாய்ந்தமருது செய்தியாளர்.

## கவிதை நூல் வெளியீடு!

**வ**டமாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த முல்லை முஸ்ரிபாவின் "இருத்தலுக்கான அழைப்பு" கவிதை நூலின் அறிமுகவிழா அண்மையில் நுரைச்சோலையில் நடைபெற்றது. எம்.எச்.எம். இப்றாகீம் மௌலவியின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் புத்தளம் ஹாசிமியா அரபிக் கல்லூரி அதிபர் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் அவர்களும்: சிறப்பு அதிதிகளாக பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ், கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லாஹ். கலாபூசணம் எம்.ஏ.எம். ஜவாத் மரைக்காயர். புத்தளம் வலயக் கல்விப் பணிப்பாளர் இ. புஷ்பராசன் உட்பட பல முக்கிஸ்தர்களும் கலந்து கொண்டனர்.




முஸ்லிம் குரல் பத்திரிகை நமது மக்களின் இழப்புகளை ஆவணப்படுத்தி. இழப்புகளுக்கு நீதி வேண்டிப் போராடும் பணியை. முஸ்லிம் தேச ஆவணக் காப்பகத்தினூடாக முன்னெடுத்து வருவதை அறிந்திருப்பீர்கள். எமது இந்த முயற்சிக்கு நமது மக்கள் மத்தியிலிருந்து பெருமளவு ஆதரவும், ஆவணங்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன. இத்தகவல்களை நமது மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் நோக்கில் மக்கள் பத்திரிகை என்ற வகையில் இத்தொடர் எழுதப்படுகிறது. எமக்கு கிடைத்த விபரங்களின் எண்வரிசைப்படி இங்கு பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.

203

சாஹுல் ஹமீது ஹபீபுர் றகுமான், இல.90/5,ஊர் வீதி, காத்தான்குடி-04.
பிறந்த திகதி :1967-03-16
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும் : 1990-07-12ல் குருக்கள் மடத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டார். இதுவரை வீடு திரும்பவில்லை.

---

204

முத்தலிபு ஆப்தீன், மஞ்சந்தொடுவாய், 19ம் வட்டாரம், மட்டக்களப்பு.
வயது :29
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும் : 1987-12-30ல் தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 1867

---

205

முஹம்மது இப்றாகீம் சுல்தான் இப்றாகீம். 232/A. கிராமோதய வீதி, பரீட் நகர், காத்தான்குடி-01.
பிறந்த திகதி: 12-01-1964.
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும்:1990-07-12ல் தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 628

---



206

சாகுல் ஹமீத் நஸிர், 33/10, ஜமாலியா வீதி, திருகோணமலை.
பிறந்த திகதி : 01.06.1959
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும்: 1990-06-20ல் இக்பால் நகர் நிலாவெளியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 301

---



207

அலித்தம்பி ஜஹுபர், எம்.பி.சி.எஸ், ஒழுங்கை, ஊர் வீதி, காத்தான்குடி-01.
பிறந்த திகதி : 1978-06-29
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும்: 1990-08-03ல் ஹுஸைனியா பள்ளிவாயல் காத்தான்குடியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் நிகழ்த்தப்பட்ட படுகொலையில் மரணம்
மரண அத்தாட்சிப்பத்திர இல: 5680

---

208

சேகு இஸ்மாயில் கச்சிமுகம்மட், விடுதி வீதி, புதிய காத்தான்குடி-06.
பிறந்த திகதி : 1947
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும்: 1992-07-15ல் கிரான்குளம் மட்டக்களப்பில் வைத்து தமிழ்ப் பயங்கரவாதிகளால் கொலை செய்யப்பட்டுள்ளார்.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 820

---

## குறுநாவல் பள்ளிமுனைக் கிராமத்தின் கதை


அத்தியாயம் 13

38

நெய்னார் ஓடி வந்தான்.
'அவசிரமா கூப்பிட்டியாம்.. என்னடா முத்துவம்மது?'
'வா! உள்ளுக்க வா!'

முத்துமுகம்மது நெய்னாரை தனது அந்தரங்க அறைக்கு அழைத்துச் செல்ல – தாடிமாஸ்டர் இடையில் புகுந்து –
'சேமன், தம்பி! பின்னேரம் தலைவர் 'கோள்' எடுத்தா நீங்க கன நேரமா காணல்ல.... வந்தா எடுக்கச் சென்ன!'
'மாஸ்டர், நான் இனி சேமனில்ல....!
'ஏன்டா முத்துமுகம்மது, 'ஆசினாமா' பண்ணப் போறியா?'
'பழைய முத்துமுகம்மதா ஆகப் போறன்... மறியலுக்கு போகப் போறன்'
'ஏன்ன சேமன் இது...?'

தாடிமாஸ்டர் அதிர்ந்து போனார். செயலாளர் பதவியுமல்லவா செயலிழந்து விடும்... அப்புறம் தலைவருக்கு இணைப்பாளர் பதவிக்கு தான் வைத்துள்ள குறியும் தவறி... தாடிமாஸ்டரின் கூர்மையான கண்கள் முத்துமுகம்மதை உற்றுத் துளைக்க, 'சட்'டென முத்துமுகம்மது சுதாகரித்தான்...
உஷார்நிலையானான். லேசாகச் சிரித்து–



'சேமன் வேலய உட்ரல்ல...ம்மா மௌத்தானதில இருந்து மனசில ராஹத்தில்ல மாஸ்டர்... ஒரு சாதியா... வெறுப்பா இரிக்கி...'

'டேய், பேக் கொறுக்கா! செருப்பால அடிப்பன். வேலய உட்டா!'

தாடிமாஸ்டர் செவியெல்லாம் குளிர்ந்து நெய்னாரைப் பார்த்து ஆமோதித்து புன்னகைத்து விழியாதரவு காட்டினார். முத்துமுகம்மதும் சிரித்து– 'மாஸ்டர் தலைவர 'கோள்'ள பிடிங்க. நான் நெய்னாரோட கதச்சிட்டு வாறன்..'

தாடிமாஸ்டர் நிம்மதியாகி டெலிபோனுக்குள் புகுந்து தலைவரைத் தேடி சுழியோடத் தொடங்க – முத்துமுகம்மது நெய்னாரை வீட்டின் பின் முற்றத்திற்கு அழைத்து வந்தான். நெய்னார் அடங்காத ஆர்வமாக –

'என்னடா முத்துமுகம்மது? இருட்டுக்க பதுங்கிறாய்.. பழய யாவகம்கீவகம் வந்துட்டுதா....? ஒரு நா. நீ மைம்னாவைக் கூட்டிட்டு.....'

'பொத்துரா வாய பொட்ட நெய்னாரு!' – குரலில் பயங்கரம் இருந்தது.

நெய்னான் துனுக்குற்றான்...

பயத்துடன் முத்துமுகம்மதைப் பார்த்தான் சிரிக்க முயன்று –
'வீடி ஒண்டு எடண்டா பண்டி நெய்னாரு'
இறுக்கத்தை கலைத்தான். நெய்னாரு சிரித்து பீடி எடுத்துக் கொழுத்தி அதே பீடியில் மற்றதை புக்குப்புக்கெனக் கொளுத்தி நீட்டினான்.

'அடிரா மருமவனே கொறுக்கா!'

'நெய்னாரு, சப்புடா வழிசல்... ரெண்டு மூனு கௌமைக்கு வெர மாட்டானாம். முத்துமுகம்மது, இஞ்சப்பதாரு, ஒரு சின்ன நோட்டிஸி அடிச்சத்துக்காக அவன அடிச்சிக்கிடிச்சி உடாத! நொட்டின வேல பார்க்காத! அரசியல்ள அதெல்லாஞ் சகஸம். நொக்கு வேணுமென்டா, நாம ஒரு நோட்டிஸி பச்சபச்சயா அடிச்சு உருவம். அடிபுடி வேணா... அவன புலி தேர்ரான்... அன்பரு தேர்ரான்... எடையில நீ கொண்டு உளாத!

'நோட்டிசி அடிச்சத்துக்கு ல்லடா... ம...மைம்னாக்....க்க்ற வ..நெ..ய்னாரு! எனக்கி மைம்னாட கடிதம் வந்த!

'மைம்னாக்கு கடிதம் எழுதத் தெரியா. கெஸட்டாக்கும் சொல்லு!'

'நெய்னாரு, நான்? வெறும் அடிபுடி ல்லடா... நான் சப்புட வளிசலை ஒரேயடியா 'குளோசாக்கப் போறன்....'

"கொறுக்காப் பேயா! வீடி நிஸான் மண்டைக்கு ஏறிற்றா... பேச் சேமன்டா நீ.. அரசியல் தெரியாத பேயன் நீயி! அவன நீ குளோசாக்கத் தேவல்லடா... கிட்டவா, கேளு! புலிப்படயில சேந்த மொட உதுமான்ட மகன் அன்பரு... தெரியுந்தானே...? அவன்ட பேரு இப்ப அன்பு! நேத்து ராவு ஆய்தத்தோட சப்பு சுல்தானத் தேடி வந்தடா..."

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஹஜ்-மன-ஊறல்

இபுறாஹீம் போடி மரைக்காயர், சுபஹ் தொழுது வராந்தாவுக்கு வந்தார். காசிம் மௌலவியைக் கண்டதும், முகம் கலங்கினார்.

"அஸ்ஸலாமு அலைக்கும். என்ன மரக்கார், இந்தமுறையும், ஹஜ் பயணம்... போக... இல்யாஸ் மாஸ்டர்... பொஞ்சாதி புள்ளைகளுக்கு அடிச்சிச் சண்ட புடிச்சி ஊரஉட்டு ஓடிற்றாராம்..."

"அல்லாட லஹ்னத்துப் புடிச்சிருவான்... பத்து வருசத்துக்கு முந்தி மகளுக்கு நல்ல கல்லூடு கட்டிக் கேட்டான். நல்ல காரியமெண்டு சேத்த ஒரு லட்சம் ரூபாய்க்கும் கல்வீடு கட்டிக்குடுத்தன். ஐந்து வரிசத்துக்கு முந்தியும். ஹஜ்ஜுக்குப் போற கதயக் கேள்விப்பட்டு மக்கள சுன்னத்... கலியாணத்துக்கு வசதியில்லை யென்டு, கோவிச்சிக்கிட்டு ஊரவுட்டு ஓடினான். இதுவும், நல்ல காரியமென்று செய்தேன். மூணாவரிசம்... சுற்றிவர கல்மதில் கட்டிக் கேட்டான். இந்த வரிசம்... இவனாலே எனக்கு... ஹஜ்ஜுக்குப் போற மனஊறல்... நிறைவேறா போலதானிருக்கி மௌலவி..." அழுது சலித்துக் கூறியவாறு மசூதியைவிட்டு வீதிக்கு நடந்தார் இபுறாஹீம் மரைக்கார்.

'ஆ... நெஞ்சடைக்கிது... யாஅல்லாஹ்...' என மெல்ல யாதுமாறிவிழுந்தார் கிறவல் வீதியில். சனங்கள் கண்டு தூக்கிக் கைத்தாங்கலோடு, வீட்டுக்குடிலுக்குக் கொண்டு சென்றனர். இபுறாஹீம் போடி மரைக்காயரின் மக்கள் கேள்விப்பட்டு ஓடிவந்து சேர்ந்தனர்.

'அயலூர் அழகனைக் காட்டிலும், உள்ளூர் முடவன் நல்லங்கா போடியாரேய்... என்டமாதிரி... மத்த நாலு குமரயும், குடும்பத்தில, நெய்யிறவன், கடல்வல போடுறவன், வட்ட வயல் வேலக்காரனுகளை முடிச்சி வெச்சன். சும்மா முடிச்சவன்... இய்யாஸ் மாஸ்டர் மூணுதரம் ஹஜ்ஜுக்குப் போகத் தொடங்க... உஹ்... ஹுக்.... கும்..." நெஞ்சுக்குள் குத்திக் குறண்டி இருமிக் கொண்டிருந்த வாப்பாவின் கைநாடிபிடித்துப் பார்த்தான் மூத்த மகன், பிரின்ஸிபல் லாபீர், இனி... வாப்பாடஹால்..."

"... என்ர வாப்பா... என்ர வாழ்வாலே... ஹஜ்ஜுக்குப் போற மன ஊறலோடே..." செயினம்பு பீவி தலைவிரிகோலமாகப் புலம்பிக் கொண்டிருந்தாள்." அவன் பாவி... வாத்தி... வந்தாம் வரத்தானை, என்ர தலயில கட்டிவெச்சி... வீடுகேட்டு, மதில்கேட்டு, இப்ப... வல்கீஸி...' குமர்வாழ பணங்கேட்டு... இந்த மனவேக்காட்டாலே என்ர வாப்பாட..."

"செரி... செரி... அவரவர்ர தலை நஸீபு... அந்தாள் வாத்தியும், வீடு, சுன்னத், மதில்... இப்ப குமர்வாழத்தானே... மக்காவுக்கு ஹஜ் செய்யப்போறதெல்லாம்... குடும்பச் சிக்கலில்லாத இறுதிப் பயணந்தானே ஹஜ்... கடமை, வாப்பா, பலமுறை ஹஜ்ஜுக்குப் போகக் கஷ்டப்பட்டும், மக்கள்ர காசில போகமாட்டேன், என்ற பிடிவாதமாயிருந்து இறுதிலே, மிஞ்சிக்கிடந்த கேணித் தென்ன வளவை இரண்டு லட்சத்துக்கு விற்றும்..."



-கலாபூஷணம் மருதூர்வாணர்-

"எல்லாம்... அந்த அல்லாட லஹனத்துப் புடிச்சிருவானாலே இவள் வல்கீசிர வாப்பா வாத்தியாலதான், வாப்பாவுக்கு இப்ப ஸக்றுத்துஹலாப் போச்சிது..." செயினம்பு பீவி ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள்.

ஐந்து பெண்ணும், மூணு ஆணும் பெருத்த குடும்பத்தலைவர், இபுறாஹீம் போடியார். நெசவுத் தொழிலும், மேட்டு வயல் காணிச் செய்கையும், மீன்பிடித் தோணிவலைகளும், நல்ல வருமானமுள்ளவராயிருந்தவர். மூத்தமகள் செமினம்பு பீவிக்கு, உத்தியோகமாப்பிள்ளை தேடினார். ஒருலட்சம், கல்வீடு, மதில்வேலி...

'சை... ஐந்து குமருக்கும், பத்து லட்சத்துக்கு மேலே... என்ர காணி, தோணிவலயள விற்றாலும்... கரை சேக்கலாமோ? ஆம்புளப்புள்ளயள், மூத்தவன் லாபீர் கெம்பஸில, மற்றவன் மஜீது ஏ.எல். மூன்றாமவன் சலீம் கிறுக்கன் ஏழுபடிக்கான். இதுக்கிடலே, என்ர தறிமால்ல கூலிக்கி நெஞ்சவன், சுலைமானும், தறியள் போட்டு... இப்ப ஹஜ்ஜிக்கு மக்கா தேசமெல்லாம் போற அளவுக்குப் பணக்காரன். நான் ஹஜ் செய்ய ஆசதான்... இதுக்கொரு வழி...

அயலூரான், இல்யாஸ் மாஸ்டர்ப் பொடியன், செயினம்பில மசங்கி, சும்மா கைக்கூலி சீதனம் வேணாமென்று...

"அல்லாஹு அக்பரல்லா... அஸ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லா... அஸ்ஹதுஅன்ன முஹம்மதுர் ரஸுலுல்லாஹ்... ஹைஆலஸ் ஸலாஹ்... ஹைஆலல் பலாஹ்... லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸுலுல்லாஹ்" லாபிர் அதிபர், வாப்பாவின் வலச் செவிக்குள் காமத் சொல்லி ஊதிக் கொண்டிருந்தார்.

"என்ரல்லாவே வாப்போ... வாப்போ... ஹஜ்ஜுக்குப் போகலாமே, மனஊறலோடே... மகுத்தாப் பெயித்தயளோ... வாப்போ... வாப்போ..." செயினம்பு வீவி, தலைவிரி கோலமாக வாப்பாவின் மார்பினில் விழுந்து ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள். மற்றவர்களும் ஒப்பாரி வைத்தனர்.

"அல்ஹம்துலில்லாஹ்... உம்மா போனவரிசம்... இதே செவ்வாய், காலம்புற... மவுத்தானமாதிரி... வாப்பாவும், ஹஜ்ஜுக்குப் போற மனஊறலோடே பயணம் போக..." என்று லாபீர் அதிபரும், விக்கி விக்கி அழுது புலம்பிக் கொண்டிருந்தார்.

*(யாவும் கற்பனை)*




**நமது** சூழல் அதிகப்படியான மாற்றீடுகளை வேண்டி நிற்கிறது. நமது கலாச்சாரம், பாரம்பரியம் பண்பாடுகள் அனைத்தும் எமது நம்பிக்கைக்கும் வாழ்வு முறைமைக்கும் பொருத்தமில்லாத அம்சங்களோடு கலந்து கிடக்கின்றன. இவ்வுண்மையினை நமது வாழ்வு முறைமைகளின் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாத இந்நாட்கள் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

நமக்கு பொருத்தமேயில்லாத இக்கலவைகளிலிருந்து நமது பண்பாட்டு, கலாசார கட்டுமானங்களை பிரித்தறிந்து வலுவூட்டுவதன் அவசியத்தினை மிகத் தீவிரமாய் உணர்ந்துள்ள பல தளங்களிலிருந்தும் மாற்றீடுகள் வரத்தொடங்கியிருக்கின்றன.




சிறுவர் இலக்கிய ஆளுமைப்பரப்பில் நீண்ட காலமாக உணரப்பட்டு வந்த மாற்றீட்டின் வடிவமாக 'பிஸ்மி' என்கிற இஸ்லாமிய சஞ்சிகை வெளிவந்துள்ளது. நமது பண்பாட்டு கலாசார நம்பிக்கை வரலாறுகளை சிறுவர்களிடம் செதுக்குவதற்கு நிலவிய நீண்ட கால வெற்றிடத்தினை 'பிஸ்மி' நிறைவேற்றிவருகின்றது. இரண்டே இதழ்களே வெளிவந்துள்ள பிஸ்மிக்கு நமது சூழலில் கனிசமானளவில் ஆதரவு இருப்பதற்கு இதுவே காரணமாகும்.

இஸ்லாமியக்கதைகள், அல்குர்ஆன் கூறும் நபிமார்களின் வரலாறு, அல்குர்ஆனின் சூறாக்களின் விளக்கங்கள், நமது அறிஞர்கள், மேதைகள் என்பன தொடர்பாக மிக எளிய இலகு தமிழில் முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொது அறிவு விடயங்கள், போட்டிகள், சிறு துஆக்கள், ஹதீஸ்கள், பிஸ்மி நண்பர்கள் என பல விடயங்களையும் பிஸ்மி சுமந்துள்ளது. காத்தான்குடி கலை கலாசார பண்பாட்டுக் கழகத்தினது அனுசரனையோடு வெளிவரும் பிஸ்மி, கற்களுக்கும், முட்களுக்கும், சொற்களுக்கும் பழக்கப்படாத சிறுவர் உள்ளங்களை பக்குவப்படுத்துவதினூடாக, நமது அறிவுப் பாரம்பரியத்தை கட்டியெழுப்ப முனைவது மகிழ்ச்சிக்குரியது.

எனினும் நால்வர்ணங்களில் முன் பின் அட்டைகளை பதிப்பித்து மிகச் சொற்பளவு பக்கங்கள் கொண்டதாக பிஸ்மி வெளிவருவது, பிஸ்மியின் எதிர்காலத்தின் மீது பெரும் சுமைகளையும் தடைகளையும் ஏற்படுத்தும் என்பதோடு, இலக்காகக் கொள்ளப்படும் வயதுப் பிரிவினரை வரையறை செய்வதிலும் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. இரண்டாம் இதழில் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் வெளிவந்துள்ளது. பாலர் பாடசாலை தொடக்கம் 5ம் ஆண்டு வரைக்குமான அகன்ற வயதுப்பிரிவினரை இலக்காகக் கொள்வதற்கு பிஸ்மியின் பக்கங்கள் பலமடங்கு அதிகரிப்பினை வேண்டி நிற்கின்றன.

நமது இன அடையாளங்களை மீண்டும் உறுதிப்படுத்திக்கொள்ள பலரும் முயன்று கொண்டிருக்கும் இந்நாட்களில், நமது பண்பாடு கலாசாரம் குறித்து இளம் தலைமுறையினருக்கு மத்தியிலான விழிப்புணர்வும் முக்கியமானது. இவ்விழிப்பினை பிஸ்மி கட்சிதமாக நிறைவேற்றும் என்ற நம்பிக்கை இதன் தொடர்ச்சியான வருகையின் மூலமே உறுதியாகும். சிறுவர் சஞ்சிகைக்கான மாற்றீட்டின் முதற்கட்ட முயற்சியை வளர்த்துவருவது அக்கறைக்குரியது. எனினும் வசதிக்குறைவு கால தாமதத்துக்கு ஒரு முக்கிய காரணம். இதனை நிவர்த்தி செய்ய ஆர்வமுள்ளவர்களும் சிறுவர் சஞ்சிகையொன்றின் தேவையை உணர்ந்தவர்களும் முன்வருவார்களா? என ஆசிரியர்கள் எழுப்பியுள்ள கேள்வி எத்தனை பேரின் காதுகளில் விழுந்ததுவோ?

-மீரா-



## கரிசனை கட்டுக்குலையாதிருக்கிறது!

**சிறு** இடைவெளிக்குப்பிறகு முஸ்லிம் குரல் கிடைத்ததும் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். முஸ்லிம் சமூகத்தின் அரசியல், பொருளாதார சமூக நடவடிக்கைகள் மீதான கரிசனை அப்படியே கட்டுக்குலையாதிருந்தது.

சந்தோஷம். சுவடு 47ல் ஆரம்பித்திருக்கும் 'ஈழப்போரில் எனது சாட்சியம்" என்ற அரசியல் தொடர் அனைவரையும் கவரும் என்பது திண்ணம். மேலும் அதில் எம்மவருக்குப் பல பல பாடங்களும், படிப்பினைகளும் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

முஹ்மதலி ஜின்னா, மூதூர்.

முஸ்லிம் குரல் பத்திரிகைக்கு நாடு முழுவதிலுமிருந்து செய்தியாளர்கள், விற்பனையாளர்கள் தேவை!
உடனடியாக தொடர்புகொள்ளவும்.
தொடர்புகளுக்கு...
119/15, Vivian Gunawardana Mawatha,
(Kethampahuwa Road)
Wellampitiya,
Tel : 071 4105877

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் அணுப் பரிசோதனையினை மேற்கொள்வதாக அமெரிக்கா குற்றச்சாட்டு!

ஈரான் அணுப் பரிசோதனையை பரீட்சித்துப் பார்க்கும் இடமொன்றினைக் காட்டும் செய்மதிப் புகைப்படமொன்று அமெரிக்காவிடம் சிக்கியுள்ளது. இந்த இடமானது தெஹ்ரானுக்கு 20 மைல்களுக்கப்பாலுள்ள பார்சின் எனும் மனிதர்கள் வசிக்காத இடத்தில் அமைந்திருப்பதனை அமெரிக்கா உறுதிப்படுத்தியுள்ளது.

ஈரானிடம் அணு ஆயுதங்களைக் தயாரிக்கும் வேலைத்திட்டமொன்று இருப்பது இதன் மூலம் தெரியவருவதாக தெரிவித்த அமெரிக்க அதிகாரியொருவர், அணு வேலைத்திட்டத்திற்குரிய அனைத்துத் தகவல்களையும் ஈரான் வெளியிட வேண்டுமென்றும், இல்லாவிடில் ஐ.நா.வினது பொருளாதாரத் தடையினை எதிர்நோக்க வேண்டி வருமென்று எச்சரித்துள்ளார். 'இது அமெரிக்காவினது மேலுமோர் பொய்ப் பிரச்சாரமாகும்' என்று ஈரான் இச்செய்தியினை நிராகரித்துள்ளது.

## சமிந்தவாஸினது பிரியாவிடை வெகுவிரைவில்?



இலங்கையில் இதுவரை உருவான சிறந்த வேகப் பந்து வீச்சாளராகக் கருதப்படும் சமிந்தவாஸ் சர்வதேச தரத்தில் ஆடுகின்ற ஏனைய விளையாட்டு வீரர்களைக் காட்டிலும் விரைவாக கிரிக்கட் விளையாட்டிலிருந்து பிரியாவிடைபெற தீர்மானித்துள்ளார். 29 வயதான சமிந்தவாஸ் இங்கிலாந்தில் வெளிவரும் 'டெய்லி மிரர்' பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டியின்போது, 400 ஒருநாள் விக்கட்டுகளையும், 325 டெஸ்ட் விக்கட்டுகளையும் வீழ்த்திய பின்னர், தான் சர்வதேச கிரிக்கட்டிலிருந்து விடைபெறப் போவதாக தெரிவித்துள்ளார்.

'இவைதான் எனது இலக்காகும். அதன் பின்னர் விடைபெறுவதற்கான காலம் வந்துவிடும் என்று நம்புகிறேன்' என்று கூறியுள்ள சமிந்தவாஸ் இதுவரை 01 நாள் போட்டிகளில் 312 விக்கட்டுகளையும், டெஸ்ட் போட்டிகளில் 262 விக்கட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். இதற்கமைய இன்னும் 02 வருடங்களில் அவர் தனது இலக்கினை அடைந்துவிடுவார். அவரது 31வது வயதில் அவர் பிரியாவிடை பெறக்கூடுமெனக் கருதப்படுகிறது.

முஸ்லிம் குரல்
MUSLIM KURAL

## நிலைப்பாடு என்ன?

கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கு மிடையே நடைபெற்ற அரசியல் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர். இத்தகைய அரசியல் பாதிப்பின் காரணமாக அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சி அதிகாரத்திலிருந்து தூக்கி எறிய வேண்டுமென்ற நிலைப்பாட்டை எடுத்தனர்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை அன்று அவர்கள் இருந்த மனோநிலையின் அடிப்படையில்; அவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற மனோநிலையைத் தவிர; ஆட்சிக்கு வரவுள்ள அரசாங்கம் தேசிய இனப்பிரச்சினையில் முஸ்லிம்களுடைய விடயத்தில் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கும், அவர்களின் பொருளாதாரக் கொள்கை என்ன என்பதில் அதிக அக்கறை இருக்கவில்லை.

கடந்த பொதுத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக்கட்சி, ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கூட அவர்கள் படித்துப்பார்ப்பதற்கு அவசியம் இருக்கவில்லை. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் "முஸ்லிம்களுக்கான தனித்தரப்பை" ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்திருந்தது. ஆனால் ஐக்கிய மக்கள் கூட்டமைப்போ இதுபற்றி மூச்சே விடவில்லை.

இப்போது ஆளும் கூட்டமைப்பு அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேசியே ஆகவேண்டுமென்ற நிர்ப்பந்தத்திற் குள் தள்ளப்பட்டிருக்கிறது. அவர்களின் முன் வைப்புகளைப் பார்க்கும்போது "பழைய குருடி கதவைத் திறவடி" என்ற கதையோதான் தெரிகிறது. இதனை பரீட்சித்துப் பார்ப்பதற்கு இன்னும் நமக்கு கால அவகாசமுள்ளது.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி; இப்போதைய நிலைமையை பயன்படுத்தும் வகையிலும்; அரசாங்கத்திற்கு தேசிய, சர்வதேச ரீதியாக நெருக்கடியை ஏற்படுத்தும் நோக்கிலும்; விடுதலைப்புலிகளின் இடைக்கால சபை ஆலோசனையை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தையை தொடங்க வேண்டுமென கூச்சல் போடத் தொடங்கிவிட்டது.

இந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் முஸ்லிம்கள் தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு பொதுத்தேர்தலுக்குப் பின் என்ன என்பதை தெளிவுபடுத்துவது அக்கட்சியின் கடமையாகிறது. இதற்கு அவர்களுடன் இணைந்து அரசியல் பணியாற்றும் முஸ்லிம் காங்கிரஸ் நெருக்குதலை வழங்க வேண்டியதும் அவசியமாகும்.

தோழமையுடன் பிரதம ஆசிரியர் -

119/15, Vivian Gunawardene Mawatta,
(Kittampahuwa Road), Wellampitiya.
Phone: 071 4105877
E-mail: mkmuslimkural@yahoo.com

## 60% சதவீதமானோர் போதைப்பொருளுக்கு அடிமை

15 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுள் 60% சதவீதமானோர் மதுபானம் அருந்துவதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையத்தின் ஆலோசகரான சட்டத்தரணி ஷாக்கிய நாணயக்கார தெரிவிக்கிறார்.

மதுபானம், சிகரட், ஹெரொயின் ஆகியன இந்நாட்டில் வெகுவேகமாகப் பரவும் போதைப்பொருள்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. சிகரட் புகைப்பவர்கள் 40% சதவீதமென்றும், ஹெரொயின் பயன்படுத்துவோர் 4% சதவீதமென்றும் அவர் தெரிவித்தார்.

இந்நாட்டு ஆண்களுள் 15 - 24 வயதுக்குற்பட்டவர்களுள் 70% சதவீதமானோர் பியர் பாவனைக்கு ஆட்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த அரசாங்க காலத்தில் மதுபானங்களுக்கு அறவிடப்பட்ட வரிகள் குறைக்கப்பட்டதும், பியர் போன்ற மதுபானங்களுக்கு இலத்திரனியல் ஊடகங்களினால் வழங்கப்படுகின்ற பாரியளவிலான பிரச்சாரமுமே இத்தகைய அதிகரிப்பிற்கு காரணமென சட்டத்தரணி ஷாக்கிய நாணயக்கார வலியுறுத்திக் கூறுகிறார்.

மதுபானம் மற்றும் போதைப்பொருள்களை பயன்படுத்துவதன் காரணமாக வருடாந்தம் 20,000 பேருக்குக் கிட்டிய அளவினர் பல்வேறு நோய்களுக்கு இரையாகி மரணிப்பதாக உலக சுகாதார அமைப்பின் புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். இந்நாட்டின் ஆண்கள் சனத்தொகையில் 60% சதவீதமானோர் மதுபானத்திற்கு அடிமையாகியுள்ளதன் காரணமாக அவர்களினது வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியுற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

முஸ்லிம் தேசமும் எதிர்காலமும்

முஸ்லிம் அரசியலில் ஆர்வம் கொண்டவர்கள் வாசித்தறிய வேண்டிய அவசியமான ஆவணம்! புத்தகம் தேவைப்படுவோர், முஸ்லிம் குரல் ஆசிரியர் பீடத்துடன் தொடர்பு கொள்ளலாம்!



தபாலில் அனுப்பிவைக்கப்படும்!

விலை 200/=

-Advt-

## உங்கள் பார்வைக்கு...

- எக்ஸ்ரே ரிப்போட்டர் -

### காதர் ஹாஜியாருக்கு இப்படிச் செய்யலாமா?

காதர் ஹாஜியாரை வெளியில் கொண்டுவருவதற்கு இன்னமும் ரணில் உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லையென கருஜெயசூரியா தனக்கு வேண்டியவர்களிடம் கூறுகிறாராம். ரவி கருணநாயக்காவை கம்பிக்கூட்டுக்குள் அனுப்பாது அதனைத் தடுப்பதற்கு உறுதியாக நிற்கும் ரணில்; ஏன் காதர் ஹாஜியாரை சிறைக்குள்ளிருந்து வெளியில் கொண்டுவர முயற்சிக்கவில்லையென பல முக்கியஸ்தர்கள் இப்போது முணுமுணுக்கத் தொடங்கிவிட்டனராம்!

### அம்மணிதான் எனக்குப் பெரியவர்

கிழக்கின் உட்கட்டமைப்பு அமைச்சருக்கும் அவரின் பிரதி அமைச்சருக்குமிடையில் இப்போது படிப்படியாக மனத்தாக்கல் ஏற்பட்டு வருகிறதாம் என்னை மீறி ஒன்றும் செய்ய முடியாது என்று அவர் சொல்ல; இதனைச் சொல்வதற்கு நீ யார் என்கிறாராம் மற்றவர் அம்மணியிடம் போய் பேசிக்கொள்வோம் என்கிறாராம் பிரதியானவர்.

### ஐ.தே.க. போடும் கணக்கு

அடுத்த வருட ஆரம்பத்தில்; தாங்கள் ஒரு புதிய அரசாங்கத்தினை அமைப்போமென சூளுரைத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியினர்; கூட்டமைப்பு அரசாங்கத்திலுள்ள பல பாராளுமன்ற உறுப்பினர்களை தங்கள் பக்கம் இழுத்துக்கொள்ள ஒரு குழுவை நியமித்துள்ளனராம்;

எஸ்.பி. தலைமையிலான இக்குழு பல கூட்டமைப்பு எம்.பிக்களுடன் பேசி வருகின்றனராம். அமைச்சர், பிரதி அமைச்சர் பதவி கிடைக்காதோர்; அண்மையில் அமைச்சு மாற்றப்பட்ட சி.பி. ரட்நாயக்கா ஆகியோருடன் உடன்பாடு காணப்பட்டுள்ளதாம். விரித்த வலையில் மீன்கள் மாட்டுவது ஒரே சந்தோசமாம்!

### ரோட்டால போனதை சீலைக்குள் பிடித்துவிடுபவர்

அந்த தனியார் தொலைக்காட்சியில் விவாதம் நடாத்தும் ஏற்பாட்டாளர்; சீரியஸான விசயங்கள் பேசுவதைவிட்டு விட்டு; பல தரப்பினரிடையே சண்டையையும் சச்சரவையும் ஏற்படுத்துவதில்தானாம் குறியாய் இருப்பார். அண்மையில் நடந்த விவாதமொன்றில் தோட்ட எம்.பி. ஒருவரை புலிகள் அச்சுறுத்தும் அளவிற்கு கூட்டிக்கொடுத்துவிட்டாராம்! அந்த தோட்ட எம்.பி. பல கோயில்களுக்கு இப்போது நேர்த்திக்கடன் வைத்து அலைகிறாராம் - காப்பாற்று கடவுளே என......

### வரவு செலவுத் திட்டத்தை எப்படித் தயாரிப்பது?

நவம்பர் 10ம் திகதி சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க முடியாது அரசாங்கம் திணருகிறதாம். நிதியமைச்சரோ என்ன செய்வதென்று தெரியாது அதிகாரிகளுடன் ஒரே ஏச்சும் பேச்சும்தானாம்! உரிய காலத்தில் என்னால் வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்க முடியாது என அவர் கைவிரித்து நிற்கிறாராம். ஒன்றுமட்டும் உறுதி நவம்பர் 10ம் திகதி பட்ஜெட் சமர்ப்பிக்கப்படாது என்பது மட்டும்.

### எனக்கும் பிரதியமைச்சர் தந்தால் ஆதரிப்பதற்கு நானும் தயார்!

திகாமடுல்ல மாவட்டத்தில் மு.கா தலைவருக்கு அடுத்ததாக தெரிவு செய்யப்பட்டவர்; தான் தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினராக வரவேண்டும் என யோசிக்கத் தொடங்கிவிட்டாராம். எனது மக்களுக்கு நான் சேவையாற்ற வேண்டும்; இன்னுமொருவரையும் எனதூரில் நியமித்து உள்ளார்கள்; தான் தொடர்ந்தும் எம்.பியாக வருவதற்கு என்ன செய்யவேணுமோ அனைத்தையும் செய்வேன் என்கிறாராம். எனக்கும் பெருந்தெருக்கள் அமைச்சின் பிரதி அமைச்சர் பதவி தந்தால் தானும் ஓகே என்கிறாராம்.

### ஜே.வி.பிக்குள் இரு பிரிவினரா?

அதி தீவிரமானவர்கள்; ஓரளவு நடுநிலையானவர்கள் என ஜே.வி.பிக்குள் இரு பிரிவினர் உருவாகி வருகின்றனராம். அம்மையாருடன் இணைந்துபோய் புலிகளுடன் பேசலாம் என்கிற ஒருபிரிவினரின் பலம் நாளுக்கு நாள் ஜே.வி.பிக்குள் அதிகரித்து வருகிறதாம். அடுத்த தேர்தலில் எதிர்க்கட்சி இடத்தினைப் பிடிக்க வேண்டுமென்றால் அரசாங்கத்திலிருந்து மக்களுக்கு சேவையாற்றினால்தான் முடியுமென்கின்றனராம் அவர்கள்.

இப்பத்திரிகை 119/15, விவியன் குணவர்தன மாவத்த, வெல்லம்பிட்டிய, முஸ்லிம் குரல் பப்ளிகேஷனினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org